விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

**கல்யாண மாலை**
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 06 வியாழக்கிழமை (22.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278

## இன இணைப்பில் நல்லிணக்கம் பான் கீ மூன் உரை

(ஜெனிவா)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் ஐ.நா பொதுச் சபையின் கூட்டத்தொடரில் அதன் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா பொதுச்சபையின் 71ஆவது கூட்டத்தொடர் 23ஆம் பக்கம் பார்க்க....

## கடைகள், சந்தைகளைப் பூட்டி பேரணிக்கு ஒத்துழைப்பு வழங்குக

### தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெற இருக்கும் "எழுக தமிழ்" மாபெரும் பேரணியில் அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் வர்த்தக நிலையங்கள், சந்தைகள் மற்றும் நிறுவனங்களைப் பூட்டி பேரணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ்மக்கள்பேரவை கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையால் நேற்றிரவு விடுக்கப்பட்ட விசேட செய்திக்குறிப்பில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (11)

## எழுக தமிழ் பேரணிக்கு ரெலோ பூரண ஆதரவு

### செயலாளர் ஸ்ரீகாந்தா அறிவிப்பு




(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் 24ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாண நகரில் நிகழ்வுள்ள எழுக தமிழ் பேரணிக்கு தமது பரிபூரண ஆதரவை தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அறிவித்துள்ளது.

தமிழினத்தின் இன்றைய நிலையில் குறுகிய அரசியல் கட்சி வேறுபாடு 24ஆம் பக்கம் பார்க்க....

# 'எழுக தமிழ்' பேரணி எழுச்சி பெற வேண்டும்





## தமிழர் உணர்வை உரிமையை உலகறியச் செய்வோம்; வடக்கு முதலமைச்சர் முன்னின்று அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 24ஆம் திகதி யாழில் இடம்பெறவுள்ள "எழுக தமிழ்" மக்கள் எழுச்சிப் பேரணியானது தமிழர் தம் ஒற்றுமையையும் தமிழருக்கான அரசியல் உரிமைத் தேவையையும் உலகறியச் செய்யும் வகையில் வலிமையுடையதாக மாற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், எவ்வித பேதமின்றி தமிழ் மக்கள் அனைவரும் இப் பேரணியில் கலந்துகொள்ள அணிதிரள வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

(வவுனியா)

அநுராதபுரம் சிறைச்சாலையில் விசாரணைகள் எதுவுமின்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி நேற்று புதன்கிழமை மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பினரால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே அவர்கள் நேற்று மீண்டும இந்த உண்ணாவிரதப்போராட்டத்தை ஆரம் 24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதிகள் 23 பேருக்கு புனர்வாழ்வு; அரசு முடிவு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 23 அரசியல் கைதிகளை ஆறு மாதகால புனர்வாழ்விற்கு அனுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை பேணிய சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 96 சந்தேகநபர்களில் 23 பேருக்கு இவ்வாறு புனர்வாழ்வு பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டவுள்ளது. குறித்த 23 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் திருத்தங்களை மேற கொள்ளுமாறு சட்டமா அதிபரை மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் கோரியுள்ளார்.

மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாத தடைச் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஈழத்தமிழருக்கு ஆதரவு; பணிநீக்கப்பட்ட செய்தியாளர்

(லண்டன்)

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக செய்தி வெளியிட்ட காரணத்திற்காக பணிநீக்கம் செய்யப்பட்ட செய்தியாளருக்கு ரூ.97 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என பிரித்தானிய நீதிமன்றம் அதிரடியாக உத்தரவிட்டது.

பிரித்தானிய நாட்டை சேர்ந்த பி.பி.சி என்ற தனியார் செய்தி நிறுவனத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

## சந்தேக நபர் உயிரிழந்த சம்பவம்; பொலிஸாரை கைது செய்ய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பான வழக்கில் அப்போதைய சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூன்று பொலிஸ உத்தியோகத்தர்களை கைது செய்யுமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற சந்தேகநபரின் மரணம் தொடர்பில் குற்றம்சுமத்தப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் 3 பேரினதும் வெளிநாட்டு பயணங்களுக்கும் தடைவிதித்து நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா உத்தரவிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 24ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் வீதி விபத்துக்களால் 9 மாதங்களில் 19 பேர் உயிரிழப்பு

### 896 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்த நடப்பாண்டில் மாத்திரம் வீதி விபத்துக்களினால் படுகாயமடைந்து இதுவரை 896 பேர் அனுமதிக்கப்பட்டதுடன் 19 பேர் உயிரிழந்துள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உபதலைவர் கே.குலநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்த 24ஆம் பக்கம் பார்க்க....

# மரண அறிவித்தல்

## கதிரவேலு வீரசிங்கம் (சிங்கராசா)



கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு வீரசிங்கம் கடந்த (20.09.2016) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-பாரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அரியமலரின் பாசமிகு கணவரும், வசந்தா, கணேசன் (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), ரவீந்திரன் (கனடா), சாந்தா (கனடா), கவிராஜ் (மஹா விஷ்னு ஹாட்வெயர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகம்மா, பரிபூரணம், நாகம்மா, தம்பித்துரை, முருகையா ஆகியோரின் அன்புச்சகோதரரும் உதயகுமார், காஞ்சனாதேவி, ராஜி, நிசாந்தனா, ஜெயபால் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, தர்மர் மற்றும் தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜனார்த்தனன் (சுவிஸ்), தேனுஜன், பிரவீனன், டக்ஸ்சனா, கபின்சன், தருணிகா, சிதார்த்தன், சந்தியா, பானுகா, சுபாங்கி, சரண்ஜன், அருண்ஜன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2016) வியாழக்கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் சித்துப் பாத்தி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி:
இல.395/2, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்-குடும்பத்தினர்
0776011934, 0212221769

(5985)

# உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் விளக்கமளிக்கவில்லை!

### மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியில் மாணவிகளால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் போது சுன்னாகம் பொலிஸாரின் அசமந்தப் போக்கும் அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரினால் இது வரை விளக்கம் அனுப்பிவைக்கப்படவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வட பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த விடயம் தொடர்பான நடவடிக்கைகளின் தற்போதைய நிலை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்குறித்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு மீள்ஞாபகப்படுத்தல் கடிதத்தினை அனுப்பவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களால் பாடசாலையின் பழைய அதிபரை நீக்க வேண்டாமெனக் கோரி மேற்கொள்ளப்பட்ட போராட்டம் கடந்த 07 மற்றும் 08 ஆந் திகதிகளில் தீவிரமடைந்திருந்தது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சகல பத்திரிகைகளும் சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது செயற்பாடு தொடர்பில் விரிவான செய்தி ஒன்றினை வெளியிட்டிருந்தன.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தனது கையடக்க தொலைபேசியில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகளையும் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களையும் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டமை தொடர்பாகவும்,

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகள் ஆசிரியர்களால் தாக்கப்பட்டமை மற்றும் அங்கு கடமையிலிருந்த சுன்னாகம் பொலிஸார் உடனடி உரிய நடவடிக்கை எடுக்க தவறியமை மற்றும் முறைப்பாடுகள் பதிவுசெய்வதை மறுத்தமை தொடர்பிலும்,

இரவுவேளையிலும் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகளின் பாதுகாப்பு மற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பிரசன்னம் இல்லாமை தொடர்பிலும் பொலிஸ்மா அதிபர் விசேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை மிக விரைவாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தினால் யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரினால் கடந்த 10ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
26 - 05 - 1943



மறைவு
19 - 09 - 2016

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி இரதீஸ்வரி நந்தன் அவர்களின்
அன்புத் தாயார் அமரர் பிள்ளைநாதன் பூரணம்
அவர்களின் மரணச் செய்தி அறிந்து எம் கல்லூரிச்
சமூகம் ஆழ்ந்த துயருறுகின்றது. அன்னாரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(5984)

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரிச் சமூகம்

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்





## அமரர் பொன்னம்பலம் இராமச்சந்திரன்

ஜனாதிபதி விருது பெற்ற இலங்கையின் சிறந்த சாரதி (1936)

தாளையடியம்மனே தாராள குணமிழந்தோம்
வெள்ளைமாவடியானே வேரிழந்தோம்
காட்டுவளவானே கையிழந்தோம்
கரைந்தோடும் காலம் காட்டுவழியெமக்கு !

அன்பு கூட்டி அரவணைத்த
அன்னக்கா கருவறையின்
ஆருயிரே
மாரீசன் புயத்தானே
மாசற்ற நெஞ்சினாய்
முழுநிலவுச்சந்திரனே !
முழுமையாய் வெள்ளுடுத்தி
மூன்று குறி நெற்றியுடன்
முகமலர்த்தி
மலைப் பணியைத் தலை சுமந்து
மனதிருத்தி
முறையாய் முடித்து விடும் மேதாவி.

மௌனமாய்ப் படர்ந்த
மா புற்று நோய் கூட
மேனி வதைக்காமல்
மரியாதை தந்ததுவோ !
மூச்சு விட்ட பொழுதுகளில்
"போயிற்று வாரன்" என
முழுமை யாய் விடைபெற்ற
மாரிபொழிந்த எழிலே !
முற்றத்து நிலவொளியில்
நினைவு நிழல்
உங்கள் பரம்பரைக்கு
நிலைத்திருக்கும்.

உந்தி மிதித்து ஈருருளி
உலாவந்த ஊர்த்தெருக்கள்
உசாவிழுந்து கிடக்கின்றன
உட்கார்ந்து ஊர்பறைந்து
உறவினணைத்து

உடலலுப்புப் பாராது
உழைத்திடும் உங்கள்
உண்மைக்கு நிகரில்லை
நிதானித்து கதை கூறும்
நிமிர்வு நடை -
நேர்கொண்ட நினைவில் வஞ்சமில்லை
பொய் நெஞ்சக்காரரெல்லாம்
வாய் பொத்தி விலகிவிடும்
உங்கள் தீ வேகும் உன்னதத்தில் !


பட்டப் பகலென்ன. இரவென்ன.
படர்ந்த நெடும் பாதையெங்கும்
பாய்ந்தோடும் பேருந்தின்
இருக்கைக்கும் நோகாமல்
பவித்திரமாய் சேர்த்துவிடும்
பேருந்துவிக் கரம் பெற்ற
புகழ் சொல்லும் பெருங்கதைகள்
பேர் நூறு சொல்லி வைப்போம்
பெருந்தகையாய்!

இன்று (22.09.2016 வியாழக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(வ-5867)

இராமாவில்.மீசாலை வடக்கு. மீசாலை. குடும்பத்தினர்

# மறைந்த மாமேதை பண்டிதர், கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள் 101ஆவது பிறந்ததின நினைவு



க.வைத்தீசுவரக்குருக்கள்
கோன்தனின் அடியைப்போற்றி
குவலயத்தினிதே வாழ்வாம்

101ஆவது பிறந்ததின நினைவு

நான்மறை வேதந் தானும் நயந்திடு
நமச்சிவாயத் தேன்தனை யோதி
ஈசன் திருவடி சென்று சேர்ந்த
பான்மைய ளாக ஓது பண்புடை
வைத்தீஸ் வரராம் கோன்தனின்
அடியைப் போற்றி குவலயத்
தினிது வாழ்வாம்.

3/8, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குருவின் திருவடி குவலயம் பணிந்து
கே.கே. சிவபாலன்

# தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றம் நிருபணமாகியுள்ளதால் தண்டனை வழங்க தாமதம் வேண்டாம்

## 'எழுக தமிழ்' பேரணிக்கு ஆதரவு தெரிவித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்களை விசாரணை செய்வதற்கு சர்வதேச நீதிபதிகளோ அன்றி உள்நாட்டு நீதிபதிகளோ தேவையில்லை எனவும் நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்துள்ள 'எழுக தமிழ்' பேரணிக்கு ஆதரவு தெரிவித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலம் காலமாக தமிழர் பிரதேசங்களில் கல்விக்காக மட்டுமன்றி தமிழர் உரிமைக்காக குரல் கொடுத்து வரும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், தமிழர்களுக்கு நடந்த அநீதிகளின் சாட்சியாக உள்ளது. ஒவ்வொரு அதிபரும், ஆசிரியரும் எமது பள்ளிக் குழந்தைகளின் பாதுகாவலர்களாக உள்ளவர்கள். அவர்களே உறவுகளை இழந்த குழந்தைகளின் தாய், தந்தை என்பதால் காலம் தாழ்த்தாமல் நல்லாட்சி அரசாங்கம் எமது அரசியல் தலைமைகளின் கோரிக்கைகளை ஏற்று நியாயமான தீர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் அனைத்தும் ஆவணப்படங்களாகவும், அழிக்க முடியாத ஆதாரங்களாகவும், சாட்சியங்களோடு பதிவு செய்யப்பட்டு, சர்வதேசம் முழுவதும் வழங்கப்பட்டு விட்டன. இதனை இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் நாயகமும் ஒத்துக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் யுத்தக் குற்றவாளிகளுக்கு உடனடியாக தண்டனை வழங்கப்படுவதே பொருத்தமானது. இதனை விடுத்து விசாரணை என்னும் போர்வையில் காலத்தை இழுத்தடித்து குற்றங்களை மறைத்து, குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கும் பொறிமுறையை பலரும் கையாளுகின்றார்கள்.

நடைபெற்ற யுத்தக்குற்றங்கள், அழிக்கப்பட்ட உயிர்கள், அழிவடைந்த தமிழ் மக்களின் கல்வி உள்ளிட்ட சொத்துக்கள், தாய், தந்தையரை இழந்த குழந்தைகள், கணவன், பிள்ளைகளை இழந்தவர்களுக்கான நீதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இவை எல்லாவற்றிற்கும் நீதி கிடைக்கும் என்பதாலேயே நாம் நல்லாட்சி உருவாக்கத்திற்கு முழு ஆதரவை வழங்கினோம்.

ஆனால் நல்லாட்சி அரசிலும் கொடிய யுத்தக்குற்றவாளிகளின் பங்கு இருப்பதாக நாம் சந்தேகிக்கின்றோம். ஆகையால் சர்வதேச சமூகம் ஒட்டுமொத்தமாக தாய், தந்தையரை இழந்து, சகோதரர்களை இழந்து அநாதைகளாக்கப்பட்ட எமது குழந்தைகளுக்கு உரிய நீதியை வழங்க வேண்டும். பாடசாலைகளில் அவர்கள் உறவுகள் இல்லாத குழந்தைகளாக வாழ்வதனை எம்மால் ஜீரணிக்க முடியாது. அவர்களுக்கு உரிய நியாயம் வழங்கப்பட வேண்டும். அவர்கள் கண்முன்னே குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இதுவரை தமது உறவுகளைக்காணவில்லை என பூவோடும், பொட்டோடும் அலைந்து திரியும் எமது சகோதரிகளுக்கு முடிவு கிடைக்க வேண்டும்.

அதற்காக பெற்றோர்களையும், மாணவர்களையும் இணைத்து நாளை மறுதினம் 24 ஆம் திகதி நடைபெறும் தமிழ்மக்கள் பேரணியில் முழு அளவில் பங்கெடுக்க இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முடிவெடுத்துள்ளது என சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நாளை மறுதினம் 24 ஆம திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பேரணியில் தமிழ்பேசும் கல்வியாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளு மாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7-10)

## இலங்கையில் சிறிய தலையுடன் 22 குழந்தைகள் பிறந்துள்ளன

கடந்த 7 மாதங்களுக்குள் 22 குழந்தைகள் மிகவும் சிறிய தலைகளுடன் பிறந்துள்ளதாக குடும்பநல சுகாதார அலுவலகத்தின் வைத்திய நிபுணர் கபில ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த குழந்தைகளுக்கு தலை சிறியதாக இருப்பதற்கான காரணத்தை கண்டறிய பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த 22 குழந்தைகளின் தாய்மார்கள் கருவுற்றிருந்த நேரத்தில் எந்தவொரு வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கும் சென்றிருக்கவில்லை என உறுதியாவதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

பிரான்சின் நிதியுதவியின் கீழ் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் தலை சிறிதாக பிறக்கும் குழந்தைகள் தொடர்பில் விசேட பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் கபில ஜயரத்ன தெரிவித்துள்ளார். (இ-7-10)

## அவுஸ்திரேலிய பிரதமர் ஜனாதிபதியை சந்தித்தார்



(கொழும்பு)

அவுஸ்திரேலிய பிரதமர் மல்கம் டேர்ன்புள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 71 ஆவது பொதுச்சபை கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்கு நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதிக்கும் அவுஸ்திரேனிய பிரதமருக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் நியூயோர்க் நகரில் இடம் பெற்றது.

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அவுஸ திரேலிய அரசாங்கம் வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கமும் ஜனாதிபதியும் ஆட்கடத்தல்களை கட்டுப்படுத்துவதற்கு அவுஸ்திரேலியாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் தன்னுடைய நன்றியினைத் தெரிவித்த அவுஸ்திரேலியப் பிரதமர், அவுஸ்திரேலிய அரசாங்கமானது மிகுந்த வெளிப்படையான மனிதாபிமான கொள்கைகளை கொண்டுள்ளது எனவும் உண்மையான குடியேற்றவாசிகளை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சில குற்றவாளிக்குழுக்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலை அவுஸ்திரேலியாவுக்கு மாத்திரமல்லாது முழுப் பிராந்தியத்திற்கும் பொருந்தும் எனக் குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் இலங்கை தனது பூரண ஒத்துழைப்பை தமக்கு வழங்குவது தொடர்பில் தனது மகிழ்ச்சியினையும் தெரிவித்தார். (இ-7-10)

## எழுபது தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் உள்ளன

### இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

அதிபர் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் நாட்டில் பல தேசிய பாடசாலைகளின் நடவடிக்கைகள் முடங்கியுள்ளன.

70 தேசிய பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் காணப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை அதிபருக்கான பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற 40 பேரை தேசிய பாடசாலைகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.


எவ்வாறாயினும், சில பாடசாலைகளின் அதிபர்கள் தொடர்ந்தும் அந்த பாடசாலைகளிலேயே கடமையாற்றுவதற்கு முயற்சித்து வருவதால், அதிபர் நியமனம் வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## முழு நாடே ஆச்சரியமடையும் பட்ஜெட் - நிதி அமைச்சர் ரவி

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் முன்வைக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முழு நாடே ஆச்சரியமடையும் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சகல சவால்களுக்கு மத்தியிலும் அரசாங்கம் நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் சவாலை வெற்றி கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தொடர்புடைய அமைச்சுக்கு நிதி ஒதுக்கீட்டுக்கான பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (இ-7-10)

## ஒருவருக்கு மாதாந்தம் ரூ.75,000 வருமானம் தயாவின் புதிய திட்டம்

(கொழும்பு)

நாட்டில் ஒருவருக்கு மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்கும் வகையில் சுயதொழில் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

குறித்த அமைச்சின் ஒரு வருட நிறைவை முன்னிட்டு நடைபெற்ற முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த திட்டம் தொடர்பான வரைபு ஏற்கனவே இறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஐந்து வருடங்களை நோக்காக கொண்டு இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# ஆடுகளத்தை மாற்றும்படி கேட்கவில்லை - கும்ளே



நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டி குறித்து இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கும்ளே கான்பூரில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது.

நான் பயிற்சியாளராக பொறுப்பேற்ற பிறகு சொந்த மண்ணில் இந்திய அணி விளையாடும் முதலாவது டெஸ்ட் போட்டி இதுவாகும்.

இதனால் ஆடுகளத்தின் தன்மை குறித்துதான் உங்களது முதல் மறறும் இறுதி கேள்வியும் இருக்கும் என்பது எனக்கு தெரியும்.

ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்பது உட்பட எந்தவொரு கோரிக்கையும் நாங்கள் முன்வைக்கவில்லை.

எங்கள் சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்படுவார்கள் என்ற சிந்தனையுடன் களம் காணுவோம்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை போல், இந்த தொடரிலும் நாங்கள் சிறப்பாக செயற்படுவோம்.

என்னை பொறுத்தவரை இது ஒரு தனித்துவமான ஆடுகளமாகும். இந்த சீசன் தொடக்கத்தில் இங்கு பலத்த மழை பெய்தது. அத்துடன் இந்த ஆடுகளம் அதிகமாக பயன்படுத்தப்படவில்லை. ஆனால் ஆடுகளத்தை பார்க்க நன்றாகவே இருக்கிறது. எந்த மாதிரியான ஆடுகளம் கொடுக்கப்பட்டாலும், அதற்கு தகுந்தபடி எங்களை மாற்றிக் கொண்டு விளையாடுவோம். இந்தியாவின் 500-வது டெஸ்டுக்கு பயிற்சியாளராக செயற்படஇருப்பது பெருமை அளிக்கிறது என்றார் அவர். (செ)

# விராட் பகல் தோனி இரவு

## கபில்தேவ் தெரிவிப்பு



இந்திய அணியின் டெஸ்ட் அணித்தலைவராக இருக்கும் விராட் ஹோலிதான், இந்தியாவிற்கு டெஸ்ட் போட்டிகள் ஜெயித்து கொடுத்த வெற்றி சதவீதத்தில் முதல் இடத்தில் இருக்கிறார்.

விராட் ஹோலி இதுவரை 14 டெஸ்ட் போட்டிகளுக்கு அணித்தலைவராக இருந்துள்ளார். மூன்று தொடர்களை வென்றதுடன், 7 வெற்றி, 5 சமனிலை மற்றும் 2 தோல்விகளை பெற்றுள்ளார்.

தற்போதைய நிலையில் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியை வழி நடத்திச் செல்வதற்கு ஹோலி தான் சரியான நபர் என்று இந்தியாவிற்கு முதன்முறையாக உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் கூறியுள்ளார்.

இதுகுறித்து கபில்தேவ் மேலும் கூறுகையில்,

"விராட் ஹோலி தனக்கென ஒரு இடத்தை உருவாக்கி வருகிறார். அவருக்கென தனி இடத்தை கட்டாயம் அவர் உருவாக்குவார் என்று நினைக்கிறேன்.

ஆனால், யாருடைய இடத்தையும் அவர் பிடிக்கமாட்டார்.

அதேபோல்தான் தோனியும் தனக்கென ஒரு இடத்தை பிடித்துள்ளார். அவரும் யாருடைய இடத்தையும் பிடிக்கவில்லை.

ஒவ்வொரு கிரிக்கெட் வீரரும் தன்னுடைய சொந்த தனித்தன்மை மற்றும் சொந்த திறன்களை வெளிப்படுத்தி தங்களுக்கென தனி அங்கீகாரத்தை உருவாக்குகிறார்கள் (நாம் விரைவில் முதல் இடத்தைப் பிடிக்க வாய்ப்பு இருப்பதுபோல்). தோனி பல ஆண்டுகளாக சிறப்பாக செய்து வந்த அணித்தலைவர் பணியை தற்போது விராட் ஹோலி சிறப்பாக செய்து வருகிறார்.

தோனிக்குப் பிறகு இந்திய அணியை வழிநடத்திச் சென்று மீண்டும் சிறந்த அணியாக உருவாக்கும் வீரரை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். விராட் ஹோலிக்கும் தோனிக்கும் இடையில் பகல்- இரவு இடைவெளி இருப்பதுபோல் வேறுபாடு உள்ளது என்பதை உறுதியாகச் சொல்வேன்" என்றார். (செ)

# மெஸியின் ரீசேட் அணியத் தடை ஐ.எஸ்.தீவிரவாதிகள் எச்சரிக்கை







தங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் மக்களை கால்பந்து விளையாட்டு விளையாடக்கூடாது என்று ஐ.எஸ். தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

அதனை மீறி அவர்கள் கால்பந்து விளையாட்டு விளையாடினாலோ அல்லது விளையாட்டு வீரர்களின் சீருடையை அணிந்தாலோ அவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.


ஏனெனில், கால்பந்து விளையாட்டின் மீது இவர்கள் அதிக ஆர்வம் செலுத்தினால், நாளடைவில் அந்த விளையாட்டிற்கு அடிமையாகி அதன் பாதையில் பயணிக்க ஆரம்பித்துவிடுவர்.

இதன் காரணத்தினாலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஈராக்கின் மொசூல் நகரை சேர்ந்த 3 வாலிபர்கள் கால்பந்து விளையாடியுள்ளனர். அதில் ஒரு வாலிபர், ஆர்ஜென்டீனா கால்பந்து விளையாட்டு வீரர் மெஸியின் டீசேர்ட்டை அணிந்துள்ளார்.

இது தீவிரவாதிகளை உச்ச கட்ட கோபத்திற்கு ஆளாக்கியுள்ளது. இதன் காரணமாக அந்த மூன்று வாலிபர்களையும் பொது மக்கள் முன்னிலையில் ஒரு கம்பத்தில் கட்டி வைத்து சவுக்கடி கொடுத்துள்ளனர். மேலும், இனிமேல் மெஸியின் டீசேர்ட்டை அணியக்கூடாது என எச்சரித்துள்ளனர். (செ)

## மரண அறிவித்தல்

### சபாபதிபிள்ளை சதாசிவம்



கரவெட்டி கிழக்கு தெடுத்தனையை பிறப்பிடமாகவும் கரணவாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிபிள்ளை சதாசிவம் நேற்று (21.09.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சின்னத்தம்பி, செல்லத்துரை, வள்ளிப்பிள்ளை, சுப்பிரமணியம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும், இந்திராதேவியின் (இந்திரா) அன்புக்கணவரும் சந்திரமோகன் (பிரான்ஸ்), இராஜேஸ்வரன், விஜயசிறி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன், அமரர் ஜெயக்கணேஷ், குகதாசன், பிரசாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் யமுனாம்பிகை(பிரான்ஸ்), உதயமலர் (ஆசிரியர், யா/பொன்னம்பலம் மகா வித்தியாலயம்), அருந்தவராஜா (தவம்-சுவிஸ்), சூரியகலா, யசோ, திலீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சதுர்ஷன் (பிரான்ஸ்), சர்மிலன் (பிரான்ஸ்), சகானா (பிரான்ஸ்), விதுர்ஷனன் (உயர்தர மாணவன்- யா/ஹாட்லிக் கல்லூரி), சந்தோஷ் (சுவிஸ்), சங்கீத் (சுவிஸ்), ஜெயரூபன், கஜதீபன், கஜானா, டிஷாந்தன், அக்ஷஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.09.2016) வியாழக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.



# பொன்சேகா எழுதவுள்ள நூலுக்கு வாழ்த்து தெரிவித்துள்ள கமால்

விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்காக சகல இராணுவ அணியினருடனும் இணைந்து தனது தலைமைத்துவத்தின் கீழ் யுத்தத்தை வெற்றி கொண்ட விதத்தினை எதிர்வரும் நாட்களில் புத்தகமாக எழுதி வெளியிடப் போவதாக அமைச்சரும் முன்னாள் இராணுவத்தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அமைச்சர் பொன்சேகாவினால் வெளியிடப்படவுள்ள குறித்த புத்தகத்திற்கு தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன "நந்திக்கடலுக்கான பாதை" என்ற நூலினை அண்மையில் வெளியிட்டிருந்தார். இதனை சரத் பொன்சேகா கடுமையாக விமர்சித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-7-10)

## ஜோதிடத் தகவல்

### சர்ப்பதோஷம்

ஜெனன ஜாதகத்தில் சந்திரன் கேதுவுடனும் சூரியன் ராகுவுடனும் இணைந்து காணப்பட்டால் சர்ப்பதோஷம் ஆகும். இந்நிலை உள்ளவர்களுக்கு எவ்வளவு திறமை இருந்தாலும் வாழ்வில் முன்னேற்றம் அடைவது மிகவும் சிரமம் ஆகும்.


# மரண அறிவித்தல்



## இராமநாதன் செல்வலட்சுமி (செல்வம்)

தோற்றம்:- 07.11.1934 மறைவு:- 19.09.2016

மண்டைதீவை பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் 130, இராசாவின் தோட்ட வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் செல்வலட்சுமி (செல்வம்) அவர்கள் 19.09.2016 திங்கட்கிழமை அன்று இறையடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து இராமநாதன் (பிரதம லிகிதர்-பொலிஸ் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான சிதம்பரநாதர் சொர்ணம்மா (மண்டைதீவு) தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து (மலேசியன் பென்சனி) நாகேஸ்வரி (வேலணை) தம்பதியரின் அன்பு மருமகளும் தங்கத்தின் பாசமிகு தாயாரும் ஞானத்தின் மாமியாரும் ஆவார்.

அன்னார் அமரர் கந்தையா (சிறாப்பர் வேலணை), அமரர் இரத்தின சபாபதி (சமாதான நீதவான், தபால் அதிபர்-அல்லைப்பிட்டி), திருமதி ராசம்மா (பிரான்ஸ்), புவனேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுயம்புலிங்கம் மற்றும் மங்கையற்கரசி (யாழ்ப்பாணம்), திருநாவுக்கரசு (மண்டைதீவு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற காசிலிங்கம், காலஞ்சென்ற சாவித்திரிதேவி, சுப்பிரமணியம் (கொழும்பு), காலஞ்சென்ற மகாலிங்கசிவம், இரத்தினேஸ்வரி, நல்லநாயகி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவயோகலக்சுமி, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, சிவரட்ணம் (பிரான்ஸ்), ஜெயஸ்ரீ (கனடா), நடேசபிள்ளை (அல்லைப்பிட்டி), பராசக்தி (மண்டைதீவு) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார். இறுதிக்கிரியைகள் 22.09.2016 இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

130, இராசாவின்
தோட்ட வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(5979)

தகவல்:
செ.நடேசபிள்ளை,
S.P. ராமசந்திரா,
பொ.வி.திருநாவுக்கரசு,
021 222 5921


## இராசி பலன்

22.09.2016
(புரட்டாதி 06, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சஷ்டி முற்பகல் 11.46 மணிவரை
ரோகினி முன்னிரவு 10.15 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் சுவாதி, விசாகம் | | ராகு புத |
| செவ் | சனி | சுக் | சூரி குரு |

**மீனம்:** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உடன்பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், காரிய அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மேடம்:** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்:** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்:** எங்காவது வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம், சுப விரயங்கள் கூடும் நாள், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கௌரவமான நாள்.

**மகரம்:** செய்தொழிலில் உயர்வும் மேன்மையும் கிட்டும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிம்மம்:** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிந்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் வருகையால் உற்சாகம் அடையும் நாள்.

**துலாம்:** வரவும், செலவும் சமமாகும் நாள், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்ப்பது நல்லது.

**கன்னி:** தொழில் போட்டிகள் மாறும், பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிடைக்கும் நாள், தந்தை வழி உறவில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

# விவசாயிகளை கூலித் தொழிலாளிகளாக தொழில் முயற்சிகள் மாற்றிவிடக் கூடாது

## விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு





வடக்கில் பல்வேறு வகையான தொழில்களை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமக்கு அபிவிருத்தி அவசியம். ஆனால், அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் தொழில் முயற்சிகள் எதுவும் விவசாயிகளைக் கூலித்தொழிலாளிகளாக மாற்றிவிடக் கூடாது என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து விவசாய உள்ளீடுகளை வழங்கி வைக்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது. ரூபாய் 5 மில்லியன் பெறுமதியான விவசாய உள்ளீடுகள் வழங்கி வைக்கப்பட்ட இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபை அபிவிருத்திக்குத் தடையாக நிற்கிறது என்று சிலரால் விமர்சிக்கப்படுகிறது. நாம் எமது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய எத்தகைய அபிவிருத்தித் திட்டத்தையும் இரு கைகூப்பி வரவேற்கத் தயாராகவே உள்ளோம். அவ்வாறான பல அபிவிருத்தித் திட்டத்துக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கியும் வருகிறோம்.

போருக்குப் பிறகு வடக்கில் முதலீடு செய்ய வெளிநாட்டு நிறுவனங்களும் தென இலங்கை நிறுவனங்களும் ஆர்வம் காட்டி வருகின்றன. இந்த அபிவிருத்திகள் எதுவும் எமது கன்னி நிலத்தைச் சூறையாடி விடக்கூடாது என்பதிலும் நாம் அவதானமாக இருக்க ´வேண்டியுள்ளது. வெறுமனே அபிவிருத்திவேலை வாய்ப்பை வழங்குவதாக மாத்திரம் இல்லாமல், சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாததாகவும் இருந்தால் மாத்திரமே அது நிலைத்து நிற்கும் அபிவிருத்தியாக நீடிக்க முடியும்.

அபிவிருத்தி நிலத்தடி நீர்வளத்தைப் பாதிக்குமாக இருந்தால்,எமது பிரதேசத்தின் பிரதான தொழில் முயற்சியான விவசாயம் பாதிக்கப்படும். விவசாயிகள் கூலி வேலைகளுக்குச் செல்லவே நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

போரின் பாதிப்புகளில் இருந்து எமது மக்கள் இன்னமும் மீண்டெழவில்லை. நாளை இவர்கள் எழுந்து நின்று ஆரம்பிக்கவுள்ள தொழில்முயற்சிகளுக்கான கதவுகளை அந்நிய முதலீடுகள் இப்போது அடைத்து விடக்கூடாது என்பதையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டியுள்ளது. இவற்றைப் பற்றி நாம் பேசும்போதே, எங்களை அபிவிருத்திக்கு எதிரானவர்களாகக் காட்ட முயல்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் இ.நிசாந்தன், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் கே.சத்திய குமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.(இ-7-10)

# பல்கலைக்கு தெரிவான மாணவர்களின் விபரம்

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியில் 2015 ஆம் ஆண்டு 1 ஆம் 2 ஆம் தடவையாகக் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களின் விபரம் பாடசாலை பெயர்ப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் இவர்கள் பரிசில் பெற இருப்பதால் தங்கள் பெயர்களையும் துறைகளையும் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் உறுதி செய்யுமாறு பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

# செல்வச்சந்நிதி உற்சவகாலத்தின் போது தவறவிடப்பட்ட பொருட்களை பெறலாம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ காலத்தின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட ஆபரணங்கள், கைக்கடிகாரங்கள், அடையாள அட்டைகள், கைத்தொலைபேசிகள், சைக்கிள் திறப்புகள், கைப்பைகள், ஆவணங்கள் போன்ற பொருட்கள் எமது பிரதேச செயலக உற்வச கால பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றை பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அலுவலக நேரத்தில் உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-60)




# சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பழைய வீதி மனோன்மணி அம்பாள்ஆலய அலங்காரஉற்சவத்தின்போது வலி.கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றத்தால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றவர்களின் விபரம் வருமாறு,

முதலாமிடம்-செல்வி. தி.பானுப்பிரியா, இரண்டாமிடம்-செல்வி. சிவஆரணி பாலசிங்கம், (இருவர் மூன்றாமிடம்-செல்வன் குணராசா தர்சயன், செல்வன். சத்தியதாசன் சிவகாந்தன்.

ஆறுதல் பரிசு பெற்றோர்,

ப.கர்சனா, தக்ஷா பரராசசிங்கம், தேனுஜா குணராசா, ஸ்ரீசிவாஜன் ஸ்ரீக ஜேந்திரன், நிரோஜா விஜயகுமார், வேணுஷா சத்தியபாலன், நிதுஷா சத்தியபாலன், சதானந்தன் கௌசிகன், தங்கராசா வேணுசன். (இ-3)



அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்திய யாழ்ப்பாணக் கம்பன்விழா நிறைவு நாள் நிகழ்வுகள் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:-உ.சாளின்,ஐ.சிவசாந்தன்)

# எழுத்தாளர்கள் தமது தரமான ஆக்கங்களை பதிவு செய்யலாம்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகம் நல்லூர் பிரதேச எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் எழுத்தாளர்களின் தரமான ஆக்கங்களை பதிப்பு செய்வதற்கு நிதி உதவி செய்யவுள்ளது.

பதிப்புக்கு ரூபா 20 ஆயிரம் வழங்கப்படும். எனவே (வசதி குறைந்த ) எழுத்தாளர்கள் தமது தரமான ஆக்கங்களை பதிப்பு செய்வதற்கு நிதிஉதவி தேவைப்படின் தமது விண்ணப்பத்தை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கும்படி பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

# தேசிய வாசிப்பு மாதப் போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் நல்லூர் கிளை நூலகம் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக பிரதேச மாணவர்கள் மற்றும் நூலக அங்கத்தவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகளில்கலந்து கொள்ள விரும்புவர்கள் தமது பெயர், பாடசாலை தரம், தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களை நல்லூர் கிளை நூலகம் மாநகர சபையில் இந்த மாதம் 25.09.2016 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். போட்டிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வர்ணம் தீட்டுதல்- முன்பள்ளி, சிறுவர் கதை நிகழ்வு-முன்பள்ளி, சித்திரம் வரைதல்- தரம் 1-5 வரை, வாசிப்பு தமிழ்- தரம் 3-5 வரை, ஆங்கிலம்- தரம் 3-5 வரை, கட்டுரைதமிழ்-தரம் 6-11 வரை, ஆங்கிலம்-தரம் 6-11 வரை, பொது அறிவு 14 வயதிற்கு மேற்பட்டோர் ஜனவரி 2016 தொடக்கம் செப்டெம்பர் 30. 2016 வரையான பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை உள்ளடக்கியது என நூலகர் அறிவித்துள்ளார். (இ)

# நூல் அறிமுகவிழா

தேனுவரைப் பெருமாள் எனும் போசராச பண்டிதரின் சரசோதி மாலை அறிமுகவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவர்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொள்வார். (இ-7)

# தர்மத்தின் குரலாக தமிழர் பேரணி அமையும்



பேரிழப்புக்களை தாங்கி நிற்கின்ற தமிழினத்திற்கு என்றுதான் விடிவு கிடைக்குமோ என்ற ஏக்கம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

நல்லாட்சி மலர்ந்தால் தமிழ் மக்கள் தங்களின் வாழ்விடங்களில் மீளக்குடியமரலாம்;

காணாமற் போனவர்கள் தொடர்பில் உரிய விசாரணை நடக்கும்;

போரில் ஏற்பட்ட இழப்புக்களுக்கு பரிகாரம் தேடப்படும்; தங்களுக்கான உரிமைகள் வழங்கப்படும் என்றெல்லாம் தமிழ் மக்கள் நம்பினர்.

இதனால் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை அளித்தனர்.

தமிழ் மக்கள் வாக்களித்ததனால் தான் இன்று நல்லாட்சி என்று சொல்லக்கூடிய ஒரு அரசு இலங்கையில் உருவானது.

நல்லாட்சி உருவாகுவதற்கு உதவிய தமிழ் மக்கள் இன்று வரை கவனிப்பாரற்று இருப்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

அதுமட்டுமல்ல தமிழ் மக்கள் அளித்த வாக்குகளால் நல்லாட்சி மலர்ந்த போது சர்வதேச சமூகம் முதலில் கைவிட்டது தமிழ் மக்களைத்தான் என்பது மிகப்பெரிய துன்பத்திற்குரியது.

சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு முடிபு கண்டால் எல்லாம் சரியாகி விடும். நல்லாட்சி தமிழ்மக்களுக்கு எல்லாவற்றையும் கொடுக்கும் என்று நினைத்துக் கொண்டது.

ஆனால் நல்லாட்சி மலர்வதற்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர். ஆயினும் அவர்களுக்கு நல்லாட்சியும் எதுவும் தரவில்லை, சர்வதேசமும் எதுவும் பெற்றுக் கொடுக்கவில்லை என்பதே உண்மை.

நல்லாட்சி என்பதைப் பொறுத்தவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மனிதநேயம் மிக்கவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

சிலமாதங்களுக்கு முன்னர் வலி. வடக்கிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலி. வடக்கில்- நலன்புரி முகாம்களில் வதியும் மக்களின் இருப்பிடங்களுக்குச் சென்று அவர்களின் இருப்பு, தொழில், சமையல், சாப்பாடு என அனைத்தையும் பார்வையிட்ட பின்னர், தென்பகுதியில் இனவாதம் பேசுபவர்கள் ஒருமுறை இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் அவலத்தை நேரில் வந்து பார்க்க வேண்டும் எனக் கூறினார்.

தங்கள் சொந்த இடங்களை படையினர் கபளீகரம் செய்ததன் காரணமாக இன்று அந்த மக்கள் அனல்கக்கும் தகரக் கூரையின் கீழ் சிறு குடிசையில் தங்கள் வாழ்வைக் கழிக்கின்றனர்.

இருந்தும் இதுபற்றி எங்கள் அரசியல் தலைமைகள் கூட கவனிப்பதாகத் தெரியவில்லை.

ஏதோ அந்த மக்கள் தங்களின் சொந்தப் பிரச்சினைகளுக்காக தங்கள் ஊரை இழந்தவர்கள் என்பது போல நாமும் நினைத்துக் கொள்கிறோம்.



இதனால் தான் அந்த மக்களுக்காக நாமும் குரல் கொடுக்க வேண்டும் என்ற உண்மையை நாம் அனைவரும் மறந்து விட்டோம் என்று சொல்வதில் எந்தத் தவறும் இருப்பதாக தெரியவில்லை.

யுத்தம் முடிந்து விட்டதாயின் அந்தந்த மக்கள் அவரவர் இடங்களில் குடியிருப்பது தானே நீதி. ஆனால் அந்த நீதி மட்டும் இன்னமும் நடைமுறையாகவில்லை என்பதுதான் ஏன் என்று கேட்க வைக்கிறது.

இதைக் கேட்பது கூட தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று பதவி ஆசைக்காக அரசை தொழுகின்றவர்களுக்கு விருப்பமில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் கால அவகாசம் எடுக்கும் என்று கூறுவதில் நியாயம் இருப்பதாக ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் உங்களுக்கு என்னதான் இடைஞ்சல் இருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் கூட புனர்வாழ்வு என்ற பெயரால் விடுவிப்புக்கள் நடந்துள்ளன. அப்படியானால் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்வதில் எந்தக் காலதாமதமும் காட்டக் கூடாது அல்லவா?

தவிர,இன்று வரை காணாமற்போனவர்களின் உறவுகள் மாரடித்து வீதியில் விழுந்து புரண்டு அழுது ஐயா என் பிள்ளை எங்கே என்று கேட்கின்றனரே! இதற்கு முடிபு காண்பதற்கு ஏன் உங்களால் முடியவில்லை. காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி உண்மை நிலையை வெளிப்படுத்தினால் அது தமிழ் மக்கள் அழுவதை தடுத்து விடும் என்று பயப்படுகிறீர்களா?

காணாமற்போன தங்கள் பிள்ளைகளுக்காக கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்ற தாய்மாரின் அவலம் அவர்களுக்கு மட்டும் சொந்தமாகி விட்டது ஏன்?

அவர்களின் துன்பத்தில் நாங்களும் பங்கேற்க வேண்டும் அல்லவா?

நாங்கள் இன்று உயிரோடு இருப்பதற்கு அவர்களின் தியாகம் தானே காரணம். இதை எல்லாம் மறந்து போவது அநீதி அல்லவா?

ஆம் அன்புக்குரிய தமிழ் மக்களே! எங்களுக்குரிய தீர்வைத் தாருங்கள் என்று தமிழ் மக்கள் ஒரே குரலில் கேட்பது தவறா? அவ்வாறு கேட்பது தமிழ் மக்களுக்கான தீர்வைப் பாதிக்குமா? இதுபற்றி நீங்கள் தான் முடிபு செய்ய வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 24 ஆம் திகதி சனிக்கிழமை மாபெரும் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களை முன்வைத்து நடைபெறுகின்ற இப்பேரணி 'தமிழ் மக்களின் ஒருமித்த குரலாக ஒலிக்கும் போது அதுபற்றி சர்வதேச சமூகம் நிச்சயம் தன் பார்வையைத் திருப்பும்.

எனினும் தமிழ் அரசியல் தலைமைக்குள் இருக்கக் கூடிய ஒருசிலர் பேரணிக்கு ஆதரவு வழங்க மறுக்கின்றனர்.

அவர்கள் யார் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். தமிழ் மக்கள் மிகவும் விழிப்பானவர்கள், எதையும் அலசி ஆராய்பவர்கள். எனவே நடைபெறும் பேரணி; தமிழ் மக்களுக்கு எதிராக எதுவும் செய்யலாம் என்று நினைப்பவர்களின் சிந்தனைக்கு பூட்டுப் போடும்.

நாங்கள் ஆம் என்றால் அதைத் தமிழ் மக்கள் ஏற்க வேண்டும் என்ற அதிகார அதர்மத்திற்கும் இப்பேரணி பேரிடியாக அமையும் என்பதால் இப்பேரணியை அகிம்சை வழியில் தர்மத்தின் வழியில் இறைவனுக்கு கணக்குக் கொடுக்கும் வகையில் நாம் அனைவரும் ஒன்று திரண்டு தமிழ் மக்களின் ஒற்றுமையை, ஒருமித்த குரலாக வெளிப்படுத்த வேண்டும்.

இப்பேரணியின் வெற்றி தமிழ் மக்களின் விடயங்களில் விளையாடும் பலருக்கு பதிலடி கொடுக்கும் என்பதால் அனைவரும் அணி திரள்வது காலத்தின் அவசிய தேவையாகும்.

புருஷோத்தமன்

# வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழா ஆய்வரங்கு இரு தினங்கள் மன்னாரில்

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவின் ஆய்வரங்கு நாளை வெள்ளிக்கிழமை, மறுநாள் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் நடைபெறவுள்ளது.

ஆய்வரங்கின் முதலாம் நாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அமரர் ஆரோக்கிய நாதர்துரம் அரங்கில் நடைபெறும்.

இவ் ஆய்வரங்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் ஈழத்து தமிழ் கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் உலகமயமாதலும் உள்ளூர்மயமாதலும் எனும் தலைப்பில் ஆய்வரங்கானது ஆரம்பமாகும்.

இதனைத்தொடர்ந்து ஆய்வாளர்களான சிவசோதி கேசவனின் காணாமற்போகும் கிராமிய வழிபாட்டு முறைகளை வஷனியா பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வும் , நாட்டுக்கூத்து தொடர்பாக ஜோன்சன் ராஜ்குமாரின் ஆய்வும் இடம்பெறும்.

தொடர்ந்து எழுத்தாளர் தருமராசா அஜந் குமாரினால் இனவரைவியல் நோக்கில் செங்கை ஆழியான் நாவல்களின் ஆய்வும், விரிவுரையாளர் வண.ஜெயராசா தேவ அருட்செல்வத்தினால் ஈழத்து தமிழ் கலை இலக்கிய தளத்தில் பண்பாட்டு அடையாளங்களில் பேணுகை எனும் ஆய்வும், திருமதி ராஜேந்திரன் டிவ்னாவினால் வட இலங்கையில் அரசாங்க அதிபர் வில்லியம் துவைனம் கால நிர்வாகப் பண்பாட்டில் பத்திரிகையின் பங்கு ஆகிய தலைப்பில் ஆய்வும் இடம்பெறும்.

இதனைத்தொடர்ந்து இலங்கை ஊடகவியல் கல்லூரி விரிவுரையாளர் ஸ்ரீதயாளன் ஸ்ரீபிருந்திரனின் இலங்கை தமிழ் ஊடகங்களில் சமூகப் பொறுப்பும் விளக்க அறிவும் எனும் ஆய்வும் அபிவிருத்தி உத்தியோகத்தர் அன்பரசியின் காலனித்துவத்திற்கு பிற்பட்ட கால இலங்கையில் பல்லின கலாசார பண்பாடு சுதேச தமிழ் பண்பாட்டு அடையாளங்களில் ஏற்படுத்திய மாற்றங்கள் எனும் ஆய்வும் இடம்பெற்றும் முதலாம்நாள் ஆய்வரங்கானது நிறைவுபெறும்.

ஆய்வரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி அமரர் ஹாசிம் புலவர் அரங்கில் ஆரம்பமாகும். இவ் ஆய்வரங்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான கலாநிதி என்.சண்முகலிங்கனின் தலைமையில் ஈழத்து தமிழ் கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் உலகமயமாதலும் உள்ளூர் மயமாதலும் எனும்தலைப்பில் ஆய்வரங்கானது ஆரம்பமாகும். இதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகசமூகவியல்துறை மானிட வியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச.ஸ்ரீகாந்தனின் தமிழர் பண்பாட்டில் முத்துக்குளித்தல் தூத்துக்குடியிலிருந்து மாந்தை வரைஎனும்தலைப்பில்ஆய்வும், மன்னார் நாட்டுக் கூத்து மரபு தொடர்பான ஆய்வை வண. அன்புராசா அடிகளார் நிகழ்த்துவார். சிறுவர்களுக்கான சமூக நீதி ஈழத்து தமிழ் சிறுகதைகளை மையமாகக் கொண்ட ஆய்வை யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இரா. இராஜேஸ்கண்ணன் நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணத் தமிழர்களின் கிராமியப்பண்பாட்டு ஆவணப்படுத்துவதில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு எனும் ஆய்வை மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்துவார். தொடர்ந்து யாழ்.தேசிய கல்வியற் கல்லூரிவிரிவுரையாளர்பி.இராஜேஸ்வரனின் உயர்தர மாணவர்களின் ஊடாக அறிவு ஓர் மதிப்பீடு எனும் ஆய்வும் நடைபெற்று ஊடக எழுத்தாளர் பா.பிரதீபனின் ஈழத்து சமூக ஊடகங்களின் தாக்கம் இதழியல் அறத்திறனை அடிப்படை யாகக் கொண்ட ஆய்வும் நடை பெறும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் சமகால ஈழத்து மொழிபெயர்ப்பு இலக்கியங்களும் பண்பாட்டிடைத் தொடர்பாடலும் எனும் தலைப்பிலான ஆய்வுடன் ஆய்வரங்கமானது நிறைவுபெறும். (2-5)



முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கடற்கரையோர பகுதிகள் சுத்தப்படுத்தும் ஆரம்ப நிகழ்வை முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைத்தார். கடற்கரையோர சுற்றாடல் சுத்தப்படுத்தும் தினத்தைமுன்னிட்டு முல்லைத்தீவு கடற்கரைப் பகுதிகள் மாவட்டசெயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு முல்லைத்தீவு பகுதியிலும் அலம்பில், சிலாவத்தை ஆகிய கடற்கரைப்பகுதிகளில் சுத்தம் செய்யும் பணி களில் மாவட்ட செயலக ஊழியர்கள்,அரச திணைக்களத்தின் ஊழியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொதுமக்கள்,பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் இணைந்து ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: மல்லாவிச் செய்தியாளர்)

## பயிற்சியை பூர்த்தி செய்த 30 இளைஞர், யுவதிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கல்

### வழங்கி வைத்தார் இலங்கைக்கான கனேடியத் தூதுவர்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தினால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்,யுவதிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த சுற்றுலாத்துறைசார் முகாமைத்துவப் பயிற்சியை பூர்த்தி செய்த 30 இளைஞர், யுவதிகளுக்கு நேற்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் செல் வைட்னிக்கினால் புலமைப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் ஆஹறாஸ் விடுதியில் நேற்று பிற்பகல் 12.15 மணியளவில் குறித்த புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவன அதிகாரிகள்,சுற்றுலாத்துறைசார் அதிகாரிகள்,கல்வி நிறுவன அதிகாரிகள்,மாணவர்களின் பெற்றோர்கள் எனப்பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-5-4)

## ஒரு கோடி 50 இலட்சம் ரூபா நிதியில் 51 கிணறுகள் அமைக்கும் பணி ஆரம்பம்

### மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மீள்குடியேற்ற அமைச்சின் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள 15 கிராம சேவையாளர் பிரிவுகளிலும்24பொதுக் குடிநீர்க்கிணறுகள்,22 குழாய்க்கிணறுகள்,05 விவசாயக்கிணறுகளுமாக மொத்தம் 51 கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் வாழும் 2 ஆயிரத்து 932 குடும்பங்களைச் சேர்ந்த 9ஆயிரத்து 197 அங்கத்தவர்கள் பயன் பெறும் வகையில் வரட்சியான காலங்களில் குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன.

இதன் முதற்கட்டமாக 25 கிணறுகள்அமைக்கும் வேலைத் திட்டம் நடைபெறுகின்றது.

10 குழாய்க்கிணறுகள்,10 பொதுக்கிணறுகள், 5 விவசாயக்கிணறுகள் என நடைபெறும் வேலைத்திட்டத்தில் 10 குழாய்க்கிணறுகள் அமைக்கும் வேலைத்திட்டம் நிறைவடைந்துள்ளது.

இரண்டாம் கட்டமாக 12 குழாய்க்கிணறுகள்,14 பொதுக் கிணறுகளுமாக மொத்தம் 26 குடிநீர் கிணறுகளின் வேலைகள் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)




# சிறந்த கலைஞர்களுக்கான முதலமைச்சர் விருதும் நூற்பரிசு தேர்விற்கு தெரிவானோர் பெயர் விபரமும்

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்ற வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா இவ்வாண்டு மன்னார் மாவட்டத்தின் நகர சபை மண்டபத்தில் நாளை, நாளை மறுதினம் ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளன.

பண்பாட்டலுவல்கள்திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் அறுபது வயதிற்கு மேற்பட்ட சிறந்த கலைஞர்களுக்கானமுதலமைச்சர் விருது, முதலாவது நாளாகிய நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் சிறந்த நூற்பரிசிற்கான துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட எழுத்தாளருக்கான கௌரவிப்பு வைபவம் குறித்த விழாவின் நிறைவு நாளாகிய நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் மன்னார் மாவட்டத்தின் நகர சபை மண்டபத்தில் நடைபெறும்.

முதலமைச்சர் விருதுக்கு மாவட்ட ரீதியாக தெரிவானோர் விபரம் வருமாறு,

யாழ்ப்பாணம்

அந்தோனி சவரிமுந்து - ஊர்காவற்றுறை (நாட்டுக் கூத்து- தென்மோழி), யாக்கோப்பு அடைக்கலமுத்து - நெடுந்தீவு(நாட்டுக்கூத்து), வைரவன் தில்லையன் செல்வராசா-நல்லூர்(இசைநாடகம்), நாகமுத்து நல்லதம்பி-சாவகச்சேரி (இலக்கியம் -கவிதை), சுப்பர் துரைசிங்கம்-உடுவில் (இலக்கியம்-சிறுவர் இலக்கியம்), அமரசிங்கம் இராசதுரை- தெல்லிப்பளை (இலக்கியம்-சிறுகதை), கணபதிப்பிள்ளை சச்சிதானந்தம்-சாவகச்சேரி(இலக்கியம்), திருமதி கிருஷாந்தி இரவீந்திரா-உடுவில் (பரத நாட்டியம்), தில்லைநாதன் சண்முகசுந்தரம்-காரைநகர்- (இசைத்துறை-மிருதங்கம்), தில்லையம்பலம் தவராசா-பருத்தித்துறை(கிராமியக் கலை), பொன்னர் இராசையா- காரைநகர்(ஓவியம்).

கிளிநொச்சி

செல்லையாசுந்தரம்பிள்ளை-பச்சிலைப்பள்ளி(இசைத்துறை-ஆர்மோனியம்), மந்தையன் கறுப்பையா-பச்சிலைப்பள்ளி (இசைத்துறை-புல்லாங்குழல்).

முல்லைத்தீவு

தர்மலிங்கம் செல்வராசா -புதுக்குடியிருப்பு (நாடகம்).

மன்னார்

ஏ.டி.தேவதாசன்-நானாட்டான்-(நாடகம்), சந்தியாப்பிள்ளை அருளானந்தம்-மாந்தை மேற்கு(இசைத் துறை - ஓகன்), சபாரட்ணம் சிவதாசன்-மாந்தை மேற்கு (இசைத் துறை- வயலின்).

வவுனியா

இளையதம்பி இரத்தினசிங்கம்-வவுனியா வடக்கு (சிந்து நடைக்கூத்து), திருமதி செந்திலமதி பரம சிவராஜா-வவுனியா(இசைத்துறை-வீணை), திருமதி வதனி சிறிதரன்-வவுனியா(இசைத் துறை-வாய்ப்பாட்டு).

சிறந்த நூற்பரிசுத் தேர்வுக்கு தெரிவானோர் பெயர் விபரம் வருமாறு,

ஆனந்தமயில் நித்திலவர்ணன் -பருத்தித்துறை (பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி), திருச்செல்வம் செல்வ மனோகரன்-நல்லூர் (இலங்கையின் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் ஓர் ஆய்வு),குருசுமுத்து இராயப்பு-யாழ்ப்பாணம்(காலம் கடந்த நாட்கள் (பயண அனுபவப் பதிவு), திருமதி ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்-உடுவில்(கிணற்றங்கரை), இராமச்சந்திரன் சுரேஸ்-கோப்பாய் (கிளுவம் வேலியும் கிடுகுத்தட்டியும்), இராஜேஸ்வரன் இராஜேஸ் கண்ணன்- கரவெட்டி(இரகசியமாய் கொல்லும் இருள்),எஸ்.ஏ. உதயன்-மன்னார் (யுபி. 83),திருமதி ஸ்ரீலேக்கா பேரின் பகுமார் -உடுவில் (மயில் இறகு), திருமதி மைதிலி தயாபரன் -வவுனியா (சீதைக்கோர் இராமன்), இராமசந்திரன் சுரேஸ்-கோப்பாய்(பிள்ளைத்தமிழின்பம்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டவர்களாவர். (2-5)

# ‘எழுக தமிழ்’ மக்கள் பேரணிக்கு மன்னார் பிரஜைகள் குழு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள “எழுக தமிழ்” மக்கள் எழுச்சி பேரணிக்கு மன்னார் பிரஜைகள் குழு தனது பூரண ஆதரவினை வழங்குவதாக அறிவித்துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவின் இணைப்பாளர் ஆ.சகாயத்தினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில்,

தமிழ் மக்களின் தேவை என்ன என்பதையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வை வலியுறுத்தியும் தமிழ் மக்களின் ஒருமித்த குரலை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்துவதற்கும் இலங்கை அரசு தெரிந்து கொள்வதற்குமான இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேரணியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர், உறவினர்கள், அரசியல் கைதிகளின் பெற்றோர் அனைவரும் கலந்து கொண்டு தமது பூரண ஆதரவினை வழங்குமாறு அழைப்பு விடுக்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழா

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் நடத்தப்படும் இவ்வாண்டுக்கானவடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழா மன்னார் மாவட்டத்தின் நகரசபை மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை, மறுநாள் சனிக்கிழமை ஆகிய இரு தினங்கள் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இந் நிகழ்வின் முதல் நாள் நிகழ்வு அலெக்ஸ்சாண்டர் அலெக்ஸ் அரங்கில் மன்னார் அரசாங்க அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராகவடக்கு மாகாண முதலமைச்சர்சி.வி.விக்கினேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந் நிகழ்வானது ஒளவையார் சிலை திறப்பு விழாவுடன் ஆரம்பமாகி, மன்னார் கவின் கலாலயா மன்றத்தின் வரவேற்பு நடனத்துடன் இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து வவுனியா உலுக்குளம் தர்மபால வித்தியாலய மாணவர்களின் கண்டிய நடனமும் வவுனியா அகிலாண்டேஸ்வரிநுண்கலைக் கல்லூரி மாணவர்க ளின் சிவ தாண்டவமும் இடம் பெறும்.

இந் நிகழ்வைத் தொடர்ந்து முதலமைச்சரினால் விருது வழங்கும் நிகழ்வு-நடைபெற்று கலை நிகழ்ச்சிகளாக மயில் நடனம், கதம்ப நடனம், வழக்காடு மன்றம், சிவநடனம், நாட்டுக்கூத்து விளக்க நிகழ்வு, கிராமிய சங்கமம், தில்லானா ஆகிய நிகழ்வுகளுடன் முதல் நாள்நிகழ்வுகள் நிறைவுபெறும்.

இந் நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை சவேரியான் லெம்பேட் அரங்கில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின்பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வின் பண்பாட்டு பேரணியானதுமன்னார் பாலத்திலிருந்து பொது மைதான வீதி ஊடாக விருந்தினர்கள் சகிதம் சவேரியான் லெம்பேட் அரங்கை வந்தடையும்.

இதனைத் தொடர்ந்து தமிழ்த்தாய்க்கு மலர் மாலை அணிவிக்கப்படும்.மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம் பெறும்.

தொடர்ந்து குத்துவிளக்கு நடனம், கண்டியநடனம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்று இலக்கிய விருது வழங்கல் நிகழ்வும் நடை பெறும். தொடர்ந்து கலை நிகழ்வுகளாக கிராமிய நடனம், அம்பா நிகழ்வு, தில்லானா ஆகியன இடம் பெறும். (2-5)

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 707 மாற்றுத்திறனாளிகள்

(மல்லாவி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 156 சிறார்கள் தாய் தந்தையரை இழந்த நிலையில் காணப்படுகின்றனர் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் புள்ளி விபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் 156 சிறார்கள் தாய் தந்தையரை. இழந்த நிலையில் காணப்படுகின்றனர். அவர்களுக்கான பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என அப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 707 மாற்றுத்திறனாளிகளும் காணப்படுவதாகவும் குறித்த புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)






கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம், கனகாம்பிகை அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் நிதியில் இருந்து கிளிநொச்சி பொதுச்சந்தையில் கடந்த 16ஆம் திகதி இரவு இடம்பெற்ற தீ விபத்தினால் கடைகளை இழந்த 24 பழக்கடை உரிமையாளர்களுக்குத் தேவையான நிறுத்தல் அளவுக்கருவி (தராசு), ஸ்ரூவ், ரோச், கத்தி, கணிப்பான் என்பன தலா ஒவ்வொன்றும் பொதி செய்யப்பட்டு அண்மையில் வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படம்:கிளிநொச்சி-1செய்தியாளர்)

## காலபோக நெற்செய்கை கலந்துரையாடல் கூட்டம்

(முள்ளியவளை)

முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புகளிற்கான 2016-2017 கால போக நெற்செய்கை கலந்துரையாடலுக்கான திகதிகள் முள்ளியவளை கமநல சேவை நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் பிற்பகல் 3 மணிக்கு கரைச்சிக் குடியிருப்பு, வட்டுவாகல், முல்லைப்பட்டினம், வண்ணாங்குளம், செல்வபுரம் ஆகிய விவசாயிகளிற்கான கூட்டமானது கரைச்சிக் குடியிருப்பு பிள்ளையார் கோவில் மண்டபத்திலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இப் பகுதி விவசாயிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு முள்ளியவளை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. சுதர்சன் கேட்டுள்ளார்.

★★★★★★★

முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புகளிற்கான 2016-2017 கால போக நெற்செய்கை கலந்துரையாடல் கூட்டத் திகதி முள்ளியவளை கமநல சேவை நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இன்று காலை 9.30 மணிக்கு முள்ளியவளை மேற்கு கீச்சுக்குளம், சமரவளக்குளம், நாவற்காடு ஆகிய விவசாயிகளிற்கான கூட்டம் முள்ளியவளை கமநல சேவை நிலைய ஒன்றுகூடல் மண்டபத்திலும் பிற்பகல் 3 மணிக்கு முள்ளியவளை வடக்கு குஞ்சுக்குளம், நாவற்காடு ஆகிய விவசாயிகளிற்கான கூட்டமானது முள்ளியவளை கமநல சேவை நிலைய ஒன்றுகூடல் மண்டபத்திலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது .

எனவே இப்பகுதி விவசாயிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு முள்ளியவளை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.சுதர்சன் கேட்டுள்ளார். (2-5-302)

## முதியோர், மாற்றுத்திறனாளிகள் நல்லிணக்கச் சுற்றுலா இன்று

(சிவநகர்)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சிவநகர் கிராமத்தைச் சேர்ந்த 12 முதியோர், 5 மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் இன்று வியாழக்கிழமை அநுராதபுரம் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இன்றும் நாளையும் அநுராதபுரத்தில் தங்கி நிற்பார்கள்.

இந்து கிறிஸ்தவ மத குருக்களும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இணையவுள்ளனர்.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.


அநுராதபுரத்தில் உள்ள மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தைஏற்படுத்தும்அமைப்பின் நிதி அனுசரணையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைபெறுகிறது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து செல்லும் குழுவினர் அநுராதபுரம் நகரிலுள்ள கதிரேசன் கோவில் முன்பாக வரவேற்கப்படவுள்ளனர்.

இக் குழுவினர் அநுராதபுரத்திலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்களது வீடுகளில் தங்க வைக்கப்பட்டு நல்லுறவு கலந்துரையாடல்கள், கிராமிய நல்லுறவு கலந்துரையாடல்கள், கிராமிய சுற்றுலாக்கள் என்பன நடைபெறவுள்ளன.

இந்த அமைப்பினர் கடந்த ஜூன் மாதம் 3 ஆம் திகதி சிவநகர் கிராமத்திற்கு வந்து முதியோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு உலர் உணவு அன்பளிப்புக்களை வழங்கியும் சிவநகர் அ.த.க. பாடசாலையில் சிரமதானப் பணிகளையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-254)

## தீ விபத்து தொடர்பிலான பகுப்பாய்வு குழுவின் நடவடிக்கை நேற்று ஆரம்பம்





(மல்லாவி)

கிளிநொச்சி பொது சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீவிபத்து தொடர்பிலான பகுப்பாய்வு நடவடிக்கை நேற்று கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட தடயவியல் பொலிஸாரினால் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த தீ விபத்து காரணமாக 125 கடைகள் பாதிக்கப்பட்டன.

இதன்போது 100 கடைகள் முற்றாக எரிந்ததுடன் பகுதியளவிலும் பாதிக்கப்பட் டிருந்தன.

தீ விபத்து ஏற்பட்டமை தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் இதுவரை எவ்வித உண்மையும் கண்டறியப்படவில்லை. இந்நிலையில் நேற்று தீ விபத்து தொடர்பில் பகுப்பாய்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

முற்பகல் 10.30 மணியளவில் குறித்த பகுதிக்கு வருகை தந்த குழுவினர், தீ விபத்து இடம்பெற்ற விதம் தொடர்பிலான பகுப்பாய்வு நடவடிக்கையை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (2-5-15)

# தீபட்ட மண்

இளம் தென்றல் இதமாக வீச கிளிநொச்சித் தாயின் மண்வாசம் பூவாசமாக இடமெல்லாம் பரவ சந்தோசமாக தமது அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர் மக்கள். அவர்களின் வாழ்க்கை, சந்தோசம் அனைத்தையும் கிளிநொச்சி பொதுச்சந்தையின் வர்த்தகம் எனும் பெட்டியில் பொக்கிஷமாக புதைத்தனர். திடீரென உயிரைப் பறிப்பது போல பரவியது இந்தச் செய்தி. இது சாபமா?இல்லை சதியா?



கிளிநொச்சி தாயின் தெரியாமல் செய்த தவறுக்கு கிடைத்த சாபமா? இல்லை அவளின் வளர்ச்சியைத் தடுக்க செய்த சதியா?

இம்மண்ணில் பிறந்து இம்மண்ணிலேயே வளர்ந்து இம்மண்ணிலேயே தமது வியர்வையும் சிந்த வேண்டும் என்று தமது முயற்சி, நம்பிக்கை சந்தோசம், எதிர்காலம் எல்லாவற்றையும் இந்த வர்த்தக சந்தைக்குள் விதையாக விதைத்தனர். விதைத்த விதை பல இன்னல்களுக்குப் பிறகு மெதுவாக துளிர்விடும்போது வெள்ளம் வந்து அழிப்பது போல சிறுக சிறுக ஆரம்பித்து வங்கியில் கடன்பெற்று மற்றவர்களிடம் வட்டிக்குப் பணம் பெற்று வியாபாரத்தை கொஞ்சமாக மெருகூட்டி வியாபாரம் செய்து கொண்டுள்ள போது தீ எனும் கொடிய விபத்து எல்லாவற்றையும் எரித்துச் சாம்பலாக்கியது. அந்தக் கணத்தில் அவர்களின் அவலக்குரல் ஐயோ!...கடவுளே உனக்கு இது கேட்கவில்லையா?



அந்த கணப்பொழுதில் பலரது கதறல்கள் என்னை உறையவைத்தது. அதில் ஒரு தந்தை தனது மூத்த மகனை விடுதலைப் போராட்டத்திற்கு அனுப்பி வீர மரணம் அடைந்து இழந்து விட்டார். அவனது இழப்பின் பின் என்னை மற்றைய இருவரும் காப்பார்கள் என்ற நம்பிக்கையில் வங்கியில் கடன்பெற்று, தனியாரிடமும் கடன் பெற்று மூத்த மகனின் நினைவாக அண்ணா புடைவையகம் எனும் பெயருடன் ஒரு வியாபார நிலையத்தை ஆரம்பித்து நடத்தி வந்தனர். அவர்களின் வருமானமே அது தான். அதில் ஒரு நூல் கூட மிஞ்சாது முற்றாக எரிந்து பல கோடி ரூபாக்கள் கருகி சாம்பலாகி விட்டதே என தனது தலையில் அடித்து அழுது புலம்பிக் கொண்டே மகன், தந்தை இருவரும் எரிந்து கொண்டிருந்த தீயில் சென்று விழுவதற்கு ஓடிய போது அவர்களை கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் இழுத்துப் பிடித்து அவர்கள் உயிரைக் காப்பாற்றினார். இந்தச் சம்பவம் என்னை ஒரு நிமிடம் உறைய வைத்தது. ஒவ்வொருவருடைய அவலக்குரலும் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. அது மட்டுமா? இன்னும் எத்தனை கதறல்கள். இராமாயணத்தில் இராமன் 14 வருடம் வனவாசம் சென்று மீண்டும் நாடு திரும்பியது போல 1996 ஆம் ஆண்டளவில் நடைபெற்ற யுத்தத்தில் கிளிநொச்சியிலிருந்து வவுனியா சென்று யுத்தமெல்லாம் முடிவடைந்த பிறகு மீண்டும் தாய் மண்ணுக்கு வந்து ஒருவருடைய உதவியும் இல்லாமல் மற்றவர்களின் கடையில் கூலிக்கு நின்று அந்த வருமானத்தில் சிறுக சிறுக சேமித்த பணத்தைக்கொண்டு சிறிய புடைவைக் கடை ஒன்றை ஆரம்பித்தனர். தினமும் கணவனும் மனைவியும் கடையில் வந்து உணவை உண்டும் உண்ணாமலும் சிறிதாக கொஞ்சம் முதலீட்டிலிருந்த புடைவையகத்தை பெரிதாக்குவதற்கு பெரிதும் கஷ்டப்பட்டு கோயில் கோயிலாக ஏறி, இறங்கி தீக்கிரையாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகத்தான் கொழும்புக்குச் சென்று அதிகளவிலான புடைவைகளை கொள்முதல் செய்து வந்தனர். கொள்முதல் செய்து வந்த புடைவைகளை விற்பனை செய்வதற்கு முன்பாக கடையின் சாவியை பிள்ளையாரின் பாதத்தில் வைத்து பூஜை செய்து நாங்கள் பட்ட கஷ்டத்திற்கு பலன் கிடைக்கப்போகின்றது என்று பெருமூச்சுடன் இறைவனின் பாதத்தில் வைத்த சாவியை எடுத்து வந்து வியாபாரம் செய்து கொண்டிருக்கும் போது அந்த நேரத்தில் நெருப்பை அள்ளிக் கொட்டியவர் யார்? என்னுடைய பிள்ளைக்கு தாய்ப்பாலுக்கு பதிலாக மாப்பாலைக் கொடுத்து தாயின் அரவணைப்பு, தந்தையின் அன்பு இல்லாத பிள்ளையை கையில் எடுத்து கொஞ்சிக் குலாவுவதற்கு நேரமில்லாமல் பிள்ளை எழும்புமுன் கடைக்கு வந்து பிள்ளை நித்திரை கொண்ட பிறகு வீட்டிற்குச் சென்று உழைத்த உழைப்பிற்கு இப்படி அர்த்தமில்லாமல் போய் விட்டதே. ஐயோ கடவுளே! எல்லாம் போய் விட்டதே! எனது வாழ்க்கையே எரிகிறதே என்று அந்தத் தாய் கதறிய கதறல் அங்கு நின்ற எல்லோரினதும் நெஞ்சையும் பிளந்தது. அந்த அழுகைக் குரலைக் கேட்டு உறைந்திருந்த என்னை மீண்டும் உறைய வைத்தது அந்த முன்னாள் போராளியின் கதறல். இறுதியாக நடைபெற்ற யுத்தத்தில் தனது ஒரு காலை இழந்த இவர் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று வீட்டிற்குள் முடங்கிக் கிடக்காது தன்னாலும் இந்தச் சமுதாயத்தில் ஒரு நல்ல நிலைக்கு வரமுடியும் என்று தனது ஊனத்தை பொருட்படுத்தாது வங்கியிலிருந்து கடனைப்பெற்று பாதணியழகு சாதனக்கடை ஒன்றை நடத்தி வந்தார். இதே அவருடைய வருமானமாக இருந்தது. எரிந்த தீயில் அனைத்தும் எரிந்து பொசுங்கியது.



கடவுளே யுத்தத்தினால் ஏனது காலை இழந்து அன்றாட ஜீவனோபாய வருமானத்திற்காக இருந்த இந்த வருமானமும் இப்படி தீயில் எரிந்து பொசுங்கிப் போகிறதே! நான் இனி என்ன செய்வேன்? எனது வாழ்க்கை தீயில் கருகிக்கொண்டிருக்கிறதே என்று அவர் கதறிய கதறல் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

தீ பரவிய விடயம் நேரம் செல்லச் செல்லத்தான் வியாபாரிகளுக்கு தெரிய வந்தது. கிளிநொச்சியில் மட்டும் அல்ல, வேறு இடங்களிலிருந்தும் இங்கு வந்து வியாபாரம் செய்பவர்கள் உண்டு. தீ பற்றி கிளிநொச்சி சந்தை எரிகின்றது என்ற செய்தியைக் கேட்டவுடன் வீட்டில் இருந்து உயிரைக் கையில் பிடித்தபடி வேகமாக கிளிநொச்சி சந்தையை நோக்கி இதுவரைக்கும் வாகனங்கள் ஓடாத கதியில் ஓடிவந்தனர். அந்தக் கணப்பொழுதுகள் இன்னும் என்னால் ஜீரணிக்க முடியாத பொழுதுகள்.

அந்தவேளை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு அரச பணியாளராக இருந்தும் தனது உயிரைப் பொருட்படுத்தாது தனது பணியாளர் எட்டுப்பேருடன் தானும் ஒருவனாய் எரிகின்ற தீயைக் கட்டுப்படுத்த ஓடிச்சென்று தீ பற்றியதை அணைக்க முயன்ற வேளை மின்சாரம் தாக்கி கீழே விழுந்த வரை சக பணியாளர்களால் தூக்கி எடுத்து காப்பாற்றப்பட்டார். அத்தோடு அவருடைய பணி அங்கு நின்று விடவில்லை. கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியிலிருந்து திங்கட்கிழமை இரவு 9 மணி வரைக்கும் கிளிநொச்சி வர்த்தகர்களுடன் தானும் ஒருவனாக நின்று பணியாற்றினார். சனிக்கிழமை கரைச்சிப் பிரதேச சபை பணியாளர்களுக்கு லீவு நாளாக இருந்தும் கூட தன்னுடைய பிரதேச சபை பணியாளர்களை கிளிநொச்சி பொதுச் சந்தைக்குள்ளேயே வைத்து பாதிக்கப்பட்ட வர்த்தகர்களின் சேத விபரத்தினை எடுத்ததோடு பாதிக்கப்பட்டவர்களுக்கென அவசர கொடுப்பனவாக 125 வர்த்தகர்களுக்கு காசோலை தனித்தனியாக அவர்களுடைய பெயரில் வரையப்பட்டு வழங்கப்பட்டது.

யாழ். நகருடன் இணைந்திருந்த கிளிநொச்சி நகர் தனியாக பிரிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. கரைச்சிப் பிரதேச சபை எனும் பெயர் மாநகரசபை என மாற்றமடையவிருக்கும் பொழுது யாரின் கண்பட்டதோ இவ்வாறு எல்லாம் தீக்கிரை ஆகிவிட்டதே.

கிருஸ்ணகுமார் கீர்த்தனா
A/L-2018 Maths
கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி.

# 'எழுக தமிழ்' பேரணிக்கு அறைகூவல்

## அரசியல், மனித உரிமைகளுக்கான தமிழ்ச் சட்டத்தரணிகள் அமைப்பு

வடக்கு. கிழக்குப் பகுதிகளில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் இலங்கை அரசின் தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறைகளை சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு வரும் பொருட்டு, தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'எழுக தமிழ்' பேரணிக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக "எழுக தமிழ்" தொடர்பில் அரசியல் மற்றும் மனித உரிமைகளுக்கான தமிழ்ச் சட்டத்தரணிகள் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பினால் கடந்த வருடம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இறுதிப் போரின் போது நடைபெற்ற மனிதப்பேரவலம் அல்லது இனவழிப்புக்கு வகை சொல்லக்கூடிய வகையிலேயே அதற்குரிய சர்வதேச விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்பதோடு அந்த விசாரணை ஆகக்குறைந்தது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டவாறு சர்வதேச மற்றும் பொதுநலவாய நீதிபதிகளை கொண்டதாகவும் சர்வதேச வழக்கு தொடுநர்களை உள்ளடக்கியதாக சர்வதேச நியமங்களை உள்வாங்கிக் கொண்டதன் அடிப்படையில் விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்பதையும் எமது அமைப்பு வலியுறுத்துகிறது.

கடந்த 70 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் இனவழிப்பு செயற்பாடுகள் பற்றி சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதன் மூலம் மட்டுமே தமிழர்கள் தமக்கான இறுதித் தீர்வை எட்டமுடியும் என நாம் நம்புகின்றோம். உலகில் மிகவும் கொடூரமான மனிதப் பேரவலங்கள் நடந்தேறிய நாடுகளிலே அவற்றுக்கெதிராக விடுதலை வேண்டிப் போராடிய அரசியல் தலைமைகள் ,குறித்த மனிதப் பேரவலங்கள் தொடர்பில் கடுமையாக வலியுறுத்தியே சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. இந்த அடிப்படையில் மனிதப் பேரவலங்கள் நிகழ்ந்த நாடுகளில் பாதிக்கப்பட்ட இனங்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச உடன்படிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களின் முழுமையான பங்களிப்போடு மட்டுமே சாத்தியமாயின. இதனடிப்படையில் தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ் பேரணிக்கு வடக்கு. கிழக்குப் பகுதியில் உள்ள அனைத்து தமிழ்ச் சட்டத்தரணிகளையும் மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் பொது அமைப்புக்களையும் திரண்டு வந்து தமது ஒருமித்த குரலை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுகின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10-250)


### யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


## மக்கள் வங்கி அறிவித்தல்

எதிர்வரும் 24.09.2016 (சனிக்கிழமை) நடைபெறவிருந்த மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகள், சேவை நிலையங்களில் 31.07. 2015 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகை களின் ஏல விற்பனையானது 25.09.2016 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி யாழ்.ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே.இல: 021 222 2601/ 021 222 8602
தொலைநகல் : 021 222 2602

(இ-3859)

### யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப்பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் -2016

காலம் : 2016-09-25 (ஞாயிறு)
நேரம் : காலை 9.00 மணி
இடம் : பாடசாலையின் "ஏழூர் மண்டபம்"

எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**அதிபர்**

(5973)

### பொன்னாவெளி அருள்மிகு உண்ணாமலை உமையாள் சமேத அண்ணாமலையான் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்



**சிவப்பிரியன் பூநகரி மண்ணின் மைந்தன்**
**திருவருள்சேர் திருநாவுக்கரசு இராசநாயகம் ஐயா அவர்கள்**

மகாதேவா சிறுவர் இல்லத் தலைவரும் முன்னைநாள் கிளிநொச்சி அரசாங்க அதிபரும் முன்னாள் காந்தி நிலையத் தலைவரும் சிறந்த சமூக சேவையாளரும் உயர்ந்த அன்பு மிகவாதியுமான தி.இராசநாயகம் ஐயா அவர்களை 2016 ஆம் ஆண்டுக்கான யாழ். விருதுக்கு தெரிவு செய்த யாழ்.மாநகர சபையினருக்கும் விருதை வழங்கி கௌரவித்த கௌரவ முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கும் இவ் விருதைப் பெறும் வகையில் தன்னை அர்ப்பணித்து மனித மேம்பாட்டுக்கான சேவைகளை துணிவுடன் செயலாற்றியது போன்று இன்னும் மென்மேலும் செயலாற்றுவதற்கும் உண்ணாமலை உமையாள் சமேத அண்ணாமலை சிவன் திருவருள் பாலிக்க வேண்டுமென பிரார்த்தித்து ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**

அமைப்பாளர்
ஈழவூர் சைவப்புலவர்
சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் ஐயா MA. JP
உலக சைவத் திருச்சபை இலங்கை.
உண்ணாமலை உமையாள் சமேத
அண்ணாமலை சிவன் திருக்கோயில் திருப்பணிச் சபை
பொன்னாவெளி, பூநகரி.

அருள்மிகு
வெள்ளைப்பள்ளத்து
வீரகத்தி பிள்ளையார்
இந்துமாமன்றம்,
வேரவில்.

(5857)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 8 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6031 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 32 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/6058 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/6032 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSc, MSc, MBA, ACCA லண்டன்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6062 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 27<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6033 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 19 செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6068 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 7<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6036 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 38செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:Diploma<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6071 |


**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

# உணவுப் பற்றாக்குறையால் வாடும் ஐந்து மில்லியன் சோமாலிய மக்கள்



(மொகதிஷ்)

சோமாலியாவில் உணவுப்பற்றாக் குறையால் ஏறக்குறைய 5 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. குறைந்தளவு மழை வீழ்ச்சி, வெள்ளப் பெருக்கு மற்றும் இடப்பெயர்வு ஆகிய காரணங்களினாலேயே இம்மக்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதாக ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது.

## ஐ.நா. அதிர்ச்சித் தகவல்

இது தொடர்பில் ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐந்து வயதிற்குட்பட்ட 3 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் மிக மோசமான ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, அவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவிகள் வழங்கப்பட வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளது.



குறிப்பாக பல தசாப்தங்களாக சோமாலியாவில் தொடரும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்களே, மிக மோசமான உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த ஆறு மாத காலப் பகுதிக்குள்ளேயே இதுவரை போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளோரில் கிட்டத்தட்ட அரைப் பங்கினர் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (இ-7)

## போதைப்பொருள் கடத்தல்காரர்களை சுட்டுக் கொல்ல ஜனாதிபதி உத்தரவு

(மணிலா)

பிலிப்பைன்சில் இன்னும் 6 மாதத்திற்குள் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் அனைவரையும்சுட்டுக்கொல்ல ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்ட் அதிரடி உத்தரவிட்டுள்ளார்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனாதிபதியாக ரோட்ரிகோ டுடெர்ட் பதவி வகிக்கிறார். கடந்த 6 மாதங்களுக்கு முன்பு நடந்த தேர்தலில் அவர் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்கு முன்பு இவர் மேயர் ஆக பதவி வகித்தார்.



இவர் ஜனாதிபதியாக பதவி ஏற்றவுடன் பிலிப்பைன்ஸ் நாட்டில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரம் காட்டினார். முன்னதாக போதைப்பொருள் கடத்தல்காரர்களை எதிர்த்து பொதுமக்கள் போராட வேண்டும். கடத்தல்காரர்களை சுட்டுக் கொல்ல பொதுமக்களுக்கு துப்பாக்கி அனுமதி வழங்கப்படும் என அறிவித்தார்.

மேலும் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் அவற்றை பதுக்குபவர்கள், விற்பவர்கள் என அனைவரையும்சுட்டுத்தள்ள பொலிஸாருக்கு உத்தரவிட்டார். அதை தொடர்ந்து அதிரடி சோதனை நடத்திய பொலிஸார் கடந்த 6 மாதத்தில் 3 ஆயிரம் பேரை சுட்டுக் கொன்றுள்ளனர். இந்த நிலையில் எஞ்சியிருக்கும் போதைப் பொருள் கடத்தல் காரர்களையும் ஒழிக்க அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன் படி இன்னும் 6 மாதத்தில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் அனைவரையும் சுட்டுக்கொன்று அழிக்க உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மே மாதம் நடந்த தேர்தலில் ரோட்ரிகோ டுடெர்ட் அமோக வெற்றி பெற்றார். அப்போதே பிலிப்பைன்சில் இருக்கும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட குற்றவாளிகளை அழிக்க சபதம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐ.நா. நிவாரண வாகன தொடரணி தாக்குதலுக்கு ரஷ்யாவே பொறுப்பு

### அமெரிக்கா குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

சிரியாவின் அலெப்போ நகருக்கு அருகில் ஐ.நா.வின் நிவாரண வாகனத் தொடரணியில் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு, ரஷ்யா பொறுப் பேற்க வேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

குறித்த தாக்குதலை 'மகத்தான மனிதாபிமானத்திற்கான துன்பியல்' என வெள்ளை மாளிகை வர்ணித்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச செய்திச் சேவையொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க அதிகாரிகள், இரண்டு ரஷ்ய விமானங்களே குறித்த தாக்குதல்களை முன்னெடுத்ததாகத் தெரிவித்துள்ளனர்

இதேவேளை குறித்த தாக்குதலை தமது நாட்டு போர் விமானங்கள் அல்லது சிரிய போர் விமானங்கள் நடத்தியதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டைக் கடுமையாக மறுத்துள்ள ரஷ்யா, குறித்த தாக்குதல் வான் மார்க்கமாக நடத்தப்படவில்லை எனவும், தரை வழியாகவே முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை ஐ.நா.நிவாரண வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து அலெப்போவில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இடைக்கால யுத்த நிறுத்தத்தை சிரிய இராணுவம் முடிவுக்குக் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உயர்சக்தி கொண்ட ரொக்கெட் இயந்திரத்தை சோதனை செய்து வெற்றி கண்ட வடகொரியா

வடகொரியா உயர்சக்தி கொண்ட ரொக்கெட் இயந்திரம் ஒன்றை சோதனை செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. உலக நாடுகளின் கடுமையான எதிர்ப்பையும் மீறி வடகொரியா அவ்வப்போது ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

மேலும் ஐதரசன் குண்டு சோதனையையும் அந்நாடு நடத்தியுள்ளது. இதனால் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை வடகொரியா மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக வடகொரியா உயர்சக்தி கொண்ட ரொக்கெட் இயந்திரம் ஒன்றை சோதனை செய்து பார்த்துள்ளதாக அந்நாட்டின் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த புதிய ரொக்கெட் இயந்திரத்தை தரையில் வைத்து வடகொரியா சோதனை செய்துள்ளது. உயர்சக்தி கொண்ட இந்த இயந்திரங் களில் ஏவுகணைகளை பொருத்துவதன் மூலம் அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையையும்தாக்க முடியும்என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



அமெரிக்காவையும் தாக்க முடியும் என்பதை நிரூபிக்கவே வட கொரியாவால் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

உயர்சக்தி கொண்ட ரொக்கெட் இயந்திர சோதனை வெற்றியால் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மிகுந்த திருப்தி அடைந்துள்ளதாக கூறப்படுகிறது. (இ-7)

## இனப் படுகொலைக்கான ஆபத்து அதிகளவிலுள்ளது

### புருண்டி நிலவரம் குறித்து ஐ.நா. அறிக்கை

(புருண்டி)


புருண்டியில், குறிப்பாக அரசின் முகவர்களால் மிகப் பெரிய அளவில், மனித உரிமை மீறல்கள் நடத்தப்பட்டது என்று நிபுணர்கள் குழு கண்டறிந்துள்ளது.

ஐ.நாவின் மனித உரிமை கவுன்சில் வெளியிட்டுள்ள ஒரு புதிய அறிக்கையில் நாட்டின் வரலாற்றை பார்க்கும்போது இனப்படுகொலைக்கான ஆபத்து பெரிய அளவில் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

அசிட்டில் அமர வைப்பது மற்றும் நெருப்பு மூட்டும் கருவிகொண்டு தீயிட்டு கொளுத்துவது உட்பட பல தரப்பட்ட துன்புறுத்தல்களை நிபுணர்கள் பட்டியலிட்டுள்ளனர். இன வெறியூட்டக்கூடிய வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ப்யார் குருன்சீசா மூன்றாவது முறையாக போட்டியிட முடிவெடுத்த பிறகு புருண்டியில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து வன்முறைகள் வெடித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தமிழக-கர்நாடக எல்லையில் துணை இராணுவம் குவிப்பு



(டில்லி)

**தமிழகத்துக்கு காவிரியில் நேற்று முதல் 27 ஆம் திகதி வரை விநாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடுமாறு கர்நாடகாவுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து தமிழக-கர்நாடக எல்லையான அத்திப்பள்ளியில் வழக்கத்தை விட அதிகமான துணை இராணுவ வீரர்கள் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.**

80 துணை இராணுவ வீரர்கள் துப்பாக்கிகளை ஏந்தியவாறு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நுழைவு வாயில் அருகே, துணை இராணுவத்தினர் பந்தல் ஒன்றையும் அமைத்துள்ளனர்.

மேலும், நுழைவு வாயிலை ஒட்டியவாறு இரும்பு தடுப்பு கம்பிகளை அமைத்து, போராட்டக்காரர்கள் மற்றும் கன்னட அமைப்புகள் அங்கு திரண்டு விடாமல் இருக்கும் வகையில் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். (இ-7)

## நான்கு வாரங்களில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உச்சநீதிமன்றம் உத்தரவு

காவிரி நடுவர் மன்றம் உத்தரவிட்டபடி, நான்கு வாரங்களுக்குள் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இது காவிரிப் பிரச்சினையில் இன்னொரு முக்கிய திருப்பமாகப் பார்க்கப்படுகிறது. அதேநேரம் காவிரி நதியில் இருந்து தமிழ்நாட்டுக்கு நேற்று புதன்கிழமை முதல் 27 ஆம் திகதி வரை தினசரி 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

காவிரி நடுவர் மன்ற உத்தரவை அமுல்படுத்த உச்ச நீதிமன்றம் தடைவிதிக்காத நிலையில், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காமல் மத்திய அரசு காலம் தாழ்த்தியது தவறு என்றும், நான்கு வாரங்களுக்குள் மேலாண்மை வாரியம் அமைப்பதற்கான அரசாணையை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். (இ-7-10)

## தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க கர்நாடக அமைச்சரவை எதிர்ப்பு



முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் கர்நாடக அமைச்சரவை கூட்டம் நேற்று கூடியது. இந்த கூட்டத்தில் தமிழகத்துக்கு காவிரியிலிருந்து தண்ணீர் திறந்து விட எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்துக்கு காவிரியிலிருந்து 10 நாட்களுக்கு விநாடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விட கடந்த 5ஆம் திகதி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

பின்னர் இந்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி உச்ச நீதிமன்றில் கர்நாடக அரசு மனுத் தாக்கல் செய்தது. மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் 20 ஆம் திகதி வரை விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி வீதம் காவிரியில் தண்ணீர் திறக்க உத்தர விட்டது.

இதைத் தொடர்ந்து கர்நாடகாவில் கலவரம் மற்றும் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றன. முழு அடைப்பு உள்ளிட்ட போராட்டங்களும் நடைபெற்றன.

இந்த நிலையில் உச்ச நீதிமன்றில் காவிரி பிரச்சினை தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் நேற்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை 7 நாட்களுக்கு காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க உத்தர விட்டுள்ளது.


இதற்கு கர்நாடகத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த நிலையில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டது குறித்து ஆலோசனை நடத்த அமைச்சரவை கூட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்திருப்பதாக கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அறிவித்திருந்தார்.

அதன்படி நேற்று முற்பகல் 11 மணிக்கு முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் கர்நாடக அமைச்சரவை கூட்டம் கூடியது. இதில் கர்நாடக அமைச்சர்களுடன் முதலமைச்சர் சித்தராமையா ஆலோசனை நடத்தினார். தமிழகத்துக்கு தொடர்ந்து காவிரியில் தண்ணீர் திறந்து விடுவதால் ஏற்படும் சாதக பாதகங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் உச்ச நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக சட்ட ஆலோசகர்களிடமும் ஆலோசனை நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. (இ-7-10)

# கால்வாயில் கவிழ்ந்து பேருந்து பாரிய விபத்து

## 8 மாணவர்கள் பலி! 17 பேர் படுகாயம்





(டில்லி)

பஞ்சாபில் கால்வாயில் பேருந்து கவிழ்ந்து சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி 8 மாணவர்கள் பலியாகினர்.

மேலும் 17 பேர் காயம் அடைந்தனர்.

பஞ்சாப் மாநிலம் அட் டாரி எல்லையையொட்டி தனியார் பாடசாலை ஒன்று உள்ளது. நேற்று முன்தினம் மாலை பாடசாலை முடிந்ததும், சுற்றுவட்ட கிராமங்களில் படிக்கும் மாணவர்கள் 37 பேரை அவர்களின் வீடுகளில் விடுவதற்காக இந்தப் பாடசாலையின் பேருந்து புறப்பட்டுச் சென்றது.

வழியில் ஒரு குறுகிய பாலத்தில் அந்த பேருந்து திடீரென நின்றது.

இதனால் சாரதி பேருந்தை வேகமாக இயக்க முயன்றார். அப்போது பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பாலத்தின் கீழ் இருந்த கால்வாயில் கவிழ்ந்தது.

இதில் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி 8 மாணவர்கள் பலியாகினர். மேலும் 17 பேர் காயம் அடைந்தனர்.

பலியான மற்றும் காயம் அடைந்த அனைவருமே 10 முதல் 15 வயதுக்கு உட்பட்டோர் ஆவர். சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடிய சாரதி சரண்ஜித் சிங் திங்கட்கிழமை தான் அந்த பாடசாலையில் பணிக்கு சேர்ந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக சாரதி மற்றும் பேருந்து உரிமையாளர் இருவர் மீதும் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தலைமறைவான சாரதியை பொலிஸார் தேடி வருகின்றனர். (இ-7-10)


## நினைவு அஞ்சலி



**செல்வி சிதம்பரம் முத்தையா**

எமது கல்லூரியின் இளைப்பாறிய புகழ் பூத்த ஆரம்பப் பிரிவு ஆசிரியரும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான செல்வி. சிதம்பரம் முத்தையா அவர்கள் 07.09.2016 அன்று இறைபடி சேர்ந்துள்ளார். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (சி-5860)

மகாஜனக் கல்லூரிச் சமூகம், தெல்லிப்பழை.

## நினைவு அஞ்சலி



**திருமதி சரஸ்வதி கனகேஸ்வரன்**

எமது கல்லூரியின் இளைப்பாறிய புகழ் பூத்த புவியியல் ஆசிரியரும் எமது கல்லூரியின் அபிமானியுமான திருமதி சரஸ்வதி கனகேஸ்வரன் அவர்கள் 25.08.2016 அன்று இறையடி சேர்ந்துள்ளார். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (சி-5860)

மகாஜனக் கல்லூரிச் சமூகம், தெல்லிப்பழை.

# ஊறி தாக்குதலுக்கு இலங்கை கண்டனம்

## மோடியுடன் மைத்திரி தொலைபேசியில் பேச்சு

(கொழும்பு)

**எல்லை தாண்டிய தீவிரவாதத்தை எதிர்ப்பதாகவும் ஊரியில் இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 20 இந்தியப் படையினர் கொல்லப்பட்டமைக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசி மூலம் வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி, நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடினார்.

இதன்போது, ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் ஊரி என்ற இடத்தில் கடந்த 18ஆம் திகதி அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலில் 20 இந்தியப் படையினர் கொல்லப்பட்டமைக்கு இந்தியப் பிரதமரிடம் ஜனாதிபதி இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எல்லை தாண்டிய இந்த தீவிரவாதச் செயலையும் ஜனாதிபதி கண்டித்துள்ளார். (இ-7-10)

# போர் பற்றிய தெளிவான படத்தை தனது நூல் வெளிப்படுத்துமாம்

## சரத் பொன்சேகா கூறுகிறார்



(கொழும்பு)

தாம் விரைவில் வெளியிடவுள்ள நூல், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தொடர்பான தெளிவான படத்தை வழங்கும் என்று அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,

"போர் தொடர்பாக, ஒரு இராணுவ அதிகாரி அண்மையில் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தொடர்புபட்ட ஏனைய பல அதிகாரிகளும் மேலும் பல நூல்களை வெளியிடலாம்.

ஒரு இராணுவத் தளபதி என்றவகையில் எனது பங்கை உள்ளடக்கியதாக வெளியிடவுள்ள நூல், போருடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பான இன்னும் தெளிவான படத்தை வழங்கும்" என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன எழுதி வெளியிட்ட 'நந்திக் கடலுக்கான பாதை' நூலில் இராணுவ இரகசியங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம்சாட்டியிருந்தார்.

எனினும், தாம் எந்த இராணுவ இரகசியத்தையும் வெளிப்படுத்தவில்லை என்றும், போர் தொடர்பான இரகசியங்கள் தன்னுடன் புதைகுழியிலேயே புதைக்கப்படும் என்றும் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# புலனாய்வு நடவடிக்கைகளை மீளாய்வு செய்யக் கூடாது

## முன்னாள் இராணுவ அதிகாரி எதிர்ப்பு

இலங்கையின் முதன்மையான புலனாய்வுச் சேவையான இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் வீழ்ச்சியைத் தடுக்காவிடின், நாடு கடுமையான விலையை கொடுக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளார் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன.

'உயர்மட்ட வழக்கு ஒன்றுடன் தொடர்புடையவர்கள்' என்ற சந்தேகத்தில் இரண்டு லெப்.கேணல் அதிகாரிகள் உள்ளிட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தீவிரமான கவலையை ஏற்படுத்தியுள்ளது.

மரபு ரீதியான இராணுவ அச்சுறுத்தலை நாடு எதிர்கொள்ளாவிடினும், அனுபவம் மிக்க அதிகாரிகளினதும், படையினரதும் சேவைகளை இழந்து விடக்கூடாது.

ஓய்வு பெறுவதற்கு முன்னதாக, ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்யப்படுவதால் ஏற்படும் நிலை குறித்து ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறும் வாய்ப்புக் கிடைத்தது.

நீர்கொழும்பில் இராணுவ உயர்மட்ட அதிகாரிகளை ஜனாதிபதி சந்தித்த போது, இதுபற்றி அவரிடம் எடுத்துக் கூறும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்போது ஜனாதிபதிக்கு அடுத்த ஆசனத்தில் இருந்த அமைச்சர் ஒருவர் அதனைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

நாட்டுக்காக பணியாற்றியவர்களின் மனக்குறைகளைத் தீர்ப்பதற்கு முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

உலகின் வல்லமை மிக்க நாடுகளின் புலனாய்வுச் சேவைகள் மேற்கொள்ளும் நடவடிக்கையைப் போலவே, மலேசியாவில் இருந்து புலிகளின் ஆயுதக் கொள்வனவாளரான குமரன் பத்மநாதனை இராணுவப் புலனாய்வுப் பிரிவு கொழும்புக்கு கொண்டு வந்தது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு நாட்டின் நலன்களுக்காக மிகச்சிறந்த சேவையை ஆற்றியுள்ளது.

ஆட்சி மாற்றங்கள் ஏற்படுகின்ற போது, புலனாய்வுச் சேவைகளால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்யக் கூடாது. அத்தகைய நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்" என்றும் அவர் எச்சரித்துள்ளார். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### எதிராளிக்கு முதல் வாய்ப்பு

எப்போது உங்களைப் பார்க்க வரட்டும்? முதலில் நீங்கள் விலை சொல்லுங்கள்?

என்ன கூலி கேட்கிறாய்,சொல்?

நீங்கள் முதலில் உட்காருங்கள் என்கிற பாணியில்தான் நாம் பிறரை அணுக வேண்டும்.

இதைவிட்டு விட்டு நாளைக்கு மாலை உங்களைப் பார்க்க வருகிறேன்!

இதுதான் என்னால் தரமுடியும்.

முதலில் நீங்கள் உட்கார்ந்தால் எப்படி? என்கிற பாணியில் எதிரியை அணுகக் கூடாது.

இதற்குக் காரணம் இருக்கிறது.

எந்த மனிதனுக்குமே தான் அதிகமாக ஏவப்படுவதும் கையாளப்படுவதும் பிடிப்பதில்லை. கடமைப்பட்டவர்களும் கட்டுப்பட்டவர்களும் இப்படி எண்ணும் போது முன்பின் தெரியாத எதிராளி என்றால் அவர்களது மனநிலை பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.

ஒரு வாகனம் மட்டுமே போகக்கூடிய ரயில்வே கேட் இருக்கிறது என்றால்–நமக்கு அவசரம் இல்லையென்றால் எதிரில் நிற்கும் வாகனத்தை முதலில் வரச் சொல்லிக் கையைக் காண்பிக்கலாம்.போக்குவரத்தில் நல்ல பண்பாடு இது.

ரயிலில் சகபயணிக்கு முதலில் பெட்டியை வைக்க வாய்ப்புத் தரலாம். இந்த உணர்வு அந்தப் பயணத்தையே இனிமையாக்குவதோடு பல நன்மைகளையும் நமக்குச் செய்ய வல்லது.

நமக்கு நாளையும் அதற்கு அடுத்த நாளும் எங்கேயும் போகமுடியாதபடி வேலைகள் இருக்கும். ஆனாலும் நாம் இப்போது சந்தித்துக் கையைக் குலுக்கிக் கொண்டிருக்கிற வரை ஒரு வேலை விடயமாகப் பார்க்க வேண்டியிருக்கும்.உடனே யாரும் பொதுவாக என்ன சொல்வார்கள்? உங்களை நான் பார்த்துப் பேசனும்.நாளைக்கும் நாளன்னைக்கும் வேலை இருக்கும்.நான் புதன்னைக்கு வர்றேன் என்பார்கள்.இது மகாத் தவறு.

ஏன்?

இந்த மனிதர் தனக்கு ஆகவேண்டிய காரியத்திற்குத் தனக்குச் சௌகரியமான நேரத்திற்கு வருவாராம்.நானும் உதவ வேண்டுமாம். அடப் போய்யா! என்று உள்ளுக்கு; நினைத்துக்கொண்டு மனத்தைச் சற்று இறுக்கிக்கொண்டு விடுவார்.

மாறாக உங்களுக்குச் சௌகரியமான நாள் ஒன்றைச் சொல்லுங்க.ஒரு வேலையா உங்களை வந்து பார்க்கனும். மனம் என்றால் இளகி இறங்கி வருவார்.

ஒருவேளை அவர் நாளைக்கு வாங்களேன் என்கிறார் என்றால் இக்கட்டாகப் போய் விடுமே என்கிறீர்களா? ஓர் இக்கட்டும் இல்லை. ஒருகணம் உத்தரத்தைப் பார்த்துவிட்டு நாளைக்கும் நாளன்னைக்கும் மட்டும் கொஞ்சம் வேலை இருக்கு.இன்னொரு நாள் சொல்லுங்களேன் என்று சொல்லிச் சமாளிக்க வேண்டும்.

ஒரு வேலைக்கான கூலியையும் ஒரு பொருளுக்கான விலையையும் கூட முதலில் நாம் தீர்மானிக்கக்கூடாது. மிகக் குறைவாகச் சொல்லி அவர்களின் எரிச்சலுக்கு ஆளாகவோ மிக அதிகமாகச் சொல்லி நட்டமடையவோ நேரும். முதலில் எதிராளியின் வாயைத்தான் கிளற வேண்டும்.பிறகுதான் நம் பேரத்தை ஆரம்பித்துக்கொள்ள வேண்டும்.

ஆக எதிராளிக்கு முதலில் வாய்ப்புத் தருவது பண்பான செயல்,மனிதாபிமான செயல். நமக்கு மறைமுக நன்மைகள் அதிகம் என்பதோடு நமக்கு நிறைய முக்கியத்துவம் தருகிறாரே என்று எதிராளியை மகிழச் செய்து நமக்குச் சாதகமான சூழ்நிலைகளையும் உருவாக்கும்.

லேனா தமிழ்வாணன்

# ஆட்சியுடன் பான் கீ மூனின் மனநிலையும் மாறிவிட்டது!

## முன்னாள் அமைச்சர் பீரிஸ் விசனம்

(கொழும்பு)

ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் மனநிலையும் மாறிவிட்டதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். ருவாண்டாவில் நடந்தது போன்று இலங்கையிலும் இனப்படுகொலை இடம்பெற்றுள்ளதாக கூறும் அளவிற்கு ஐ. நா. செயலாளரின் மனநிலை மாறியுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தின் போதும் ஐ.நா செயலாளரை சந்தித்து கலந்துரையாடியிருந்தோம்.

இதன்போது ருவாண்டாவை போன்று இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவோ. இனப்படுகொலை இடம்பெற்றதாகவோ கூறவில்லை. எனினும், இன்று அவர் இலங்கையை ருவாண்டாவுடன் ஒப்பிட்டு பேசுகின்றார். ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவரின் மனநிலையும் மாறியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)




# இலங்கை பற்றிய உலகத் தலைவர்களின் சாதகமான நிலைப்பாடுகள் தொடர்பாக

# மகிழ்ச்சி



## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக தன்னிடம் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வாழ்த்துத் தெரிவித்ததாக குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கை தொடர்பில் உலக நாடுகளின் தலைவர்கள் எல்லோருமே பாராட்டுக்களை தெரிவித்ததோடு அவர்களுடைய சாதகமான பிரதிபலிப்புக்கள் தொடர்பில் தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளார்.**

நியூயோர்க் Loews Regency ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டவிரோதமான போதைப் பொருள் கடத்தலைத் தடுத்தல் தொடர்பில் கூடிய அவதானத்தை செலுத்தவுள்ளதுடன் தான் முன்னெடுத்து வரும் போதைப்பொருளுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகள் தொடர்பிலும் பொதுச் சபையில் விளக்கமளிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மதிய போசன நிகழ்விலும் கலந்துகொண்ட ஜனாதிபதி, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பொதுச் செயலாளர் பான் கீ மூன் உள்ளிட்ட பல தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். இலங்கையில் தெளிவான மாற்றம் ஒன்று தென்படுகின்றது என ஜனாதிபதி ஒபாமா இதன்போது தெரிவித்தார். அதேவேளை பான் கீ மூன், இலங்கையின் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் தன்னிடம் வாழ்த்துத் தெரிவித்ததாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கை தொடர்பில் எல்லோருமே பாராட்டுக்களைத் தெரிவித்ததோடு அவர்களுடைய இந்த சாதகமான பிரதிபலிப்புக்கள் தொடர்பில் தாம் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

தற்போது எந்தவொரு நாடும் இலங்கையுடன் வெறுப்புடனோ அல்லது பகைமையுணர்வுடனோ இல்லையெனவும் அனைத்து நாடுகளும் நட்புறவுடன் கூடிய சாதகமான நிலைப்பாட்டுடனேயே உள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, உலகத் தலைவர்களுடைய இந்த சாதகமான நிலைப்பாட்டை இலங்கைக்கு திரும்பிச் செல்லும் போது தான் எடுத்துச் செல்வேன் எனவும் மேலும் தெரிவித்தார்.

உலக வெப்பமயமாதல் தொடர்பான பாரீஸ் பிரகடனத்திற்கு பல நாடுகள் ஒப்புதல் அளித்தமை தொடர்பில் தான் மகிழ்ச்சியடைந்திருந்ததாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்கும், பொருளாதார ரீதியில் பலம்மிக்க தேசமாக இலங்கையை மாற்றுவதற்கு முழுமையாக தன்னை அர்ப்பணிப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சிறுவனாக மாறிய மகிந்த; வேடிக்கை பார்த்த யோஷித



கடந்த அரசாங்கத்தின் போது மோட்டார் வாகன பந்தயங்களுக்கு இலங்கையில் அதிகம் இடம் கிடைத்திருந்தது.

அவ்வாறு இடம்பெற்ற போட்டிகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித மற்றும் ரோஹித ஆகியோர் போட்டியிட்டமை அதிகம் பேசப்பட்டது.

கொழும்பு நகரத்தை கேந்திரமாக கொண்டு Colombo night race மற்றும் நாடு முழுவதும் இடம்பெற்ற மோட்டார் பந்தயங்களில் ராஜபக்ஷர்கள் தொடர்ந்து வெற்றி பெற்று வந்தனர்.

இந்நிலையில் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் யோஷித ராஜபக்ஷ மோட்டார் பந்தயம் ஒன்றிற்கு சென்றுள்ளனர்.

பெலிஅத்த பிரதேசத்தில் திறக்கப்பட்ட வணிக வளாகம் ஒன்றிலேயே இவர்கள் இவ்வாறு மோட்டார் பந்தயத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த வணிக வளாகத்தினுள் உள்ள கணனிக்கு தொடர்பு மோட்டார் போட்டி உபகரணங்களின் உதவியுடன் மகிந்த மற்றும் யோஷித இவ்வாறு பந்தயத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

வெலிஅத்த பிரதேசத்தில் அமைந்துள்ள குமா சிட்டி கொம்பிலேக்ஸ் என்ற வணிக வளாகம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# மகிந்த அணிக்கு ஆதரவாக கையெழுத்திட தயார்-துமிந்த

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அணியினர் முன்னெடுத்து வரும் 10 இலட்சம் கையெழுத்து திரட்டும் போராட்டத்துக்கு நானும் ஆதரவு வழங்குவேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலை விரைவில் நடத்துமாறு கோரி மகிந்த தரப்பு கூட்டு எதிரணி கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ள நிலையில், இதுபற்றி ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர்



இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாம் ஒருநாளும் தேர்தலுக்கு அச்சம் கொண்டவர்கள் இல்லை. எமக்கு தேர்தல் என்பது ஒன்றும் புதிதல்ல. இந்த தேர்தலை அவசரமாக நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும்படி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். இதற்காக இரவு பகலாக பணியாளர்களை ஈடுபடுத்தி தேர்தலை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். தேர்தலை நாளைக்கு வைப்பதென்றாலும் நாம் அதனை வரவேற்போம். கூட்டு எதிர்க்கட்சியினர் இந்த முயற்சியில் இறங்கியுள்ளார்கள். இந்த முயற்சிக்கும் எமது ஆதரவை தருகின்றோம். குறித்த இந்த கையெழுத்து வேட்டையில் நானும் கையெழுத்திட தயாராக உள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)




# அழகிய ரோஜா!

புன்னகைபுரி என்ற ஊரை தயாளன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனிடம் விலை மதிக்க முடியாத ஒரு பெரிய வைரக்கல் இருந்தது. அது அவர்களது மூதாதையர் வைத்துச் சென்ற பரம்பரைச் சொத்து. அதைத தன் நாட்டின் பெருமையாக அவன் கருதினான். இந்நிலையில் அந்த வைரக் கல்லில் தலை முடி போல் ஒரு கீறல் விழுந்தது.

மன்னன் துடித்துப் போனான். வைரத்தின் அழகே போய் விட்டது என்று வருந்தினான். உடனே அரசன் தன் நாட்டின் நகை விற்பனையாளர்களை வரவழைத்து ஆலோசித்தான். “அவ்வளவு தான் இந்த வைரத்தை ஒன்றும் செய்வதற்கில்லை.

அது தன் மதிப்பை பெரும் பகுதி இழந்துவிட்டது. அது இன்னும் விரிசல் கொடுக்கும்,” என்று வைர வியாபாரிகள் கூறினர். “யாராவது இந்த வைரத்தை இதன் பழைய மதிப்பிற்குக் கொண்டு வந்தால் அவருக்குத் தக்க பரிசு வழங்குவேன்,” என்று அரசன் அறிவித்தான். கடைசியாக ஓர் ஏழை பொற்கொல்லன் ஒருவன் அந்த ஊரில் இருந்



தான். அவனது திறமையைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத பணக்கார நகை வியாபாரிகள் அவனை சீந்துவதே இல்லை. “அரசே இந்தக் கீறலை வைத்தே வைரத்தின் மதிப்பைப்பல மடங்கு உயரத்த முடியும்,” என்றான்.

வைரக்கல் அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. சில நாட்களுக்குப் பின் அந்த பொற்கொல்லன் ஒரு சிறிய நகைப் பேழையுடன் திரும்பி வந்தான். பேழையைத் திறந்ததும் அரசன் பிரமித்து விட்டான். வைரத்தின் மீது அழகான ரோஜா ஒன்று செதுக்கப்பட்டிருந்தது. முன்பு அரசனுக்குக் கவலை அளித்த கீறல், இப்போது ரோஜாவின் காம்பாக இருந்தது.

மகிழ்ச்சியடைந்த ராஜா அவனுக்கு பல பரிசுகள் கொடுத்ததுடன் ராணிக்கு புதுவிதமான நகைகள் பல செய்து தரும்படி ஆர்டர் கொடுத்தான். அவ்வளவு தான் சீந்துவார் இல்லாமல் இருந்த பொற்கொல்லர் ஒரே நாளில் மிகவும் பிரபலமானான். அவனிடம் ஆர்டர் கொடுக்க பல நகைக்கடைக்காரர்கள் வரிசையில் நின்றனர். பேரும் புகழுமடைந்தான் வயதான பொற கொல்லன்

## 09.2016 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1499 - சுவிட்சர்லாந்து விடுதலை பெற்று தனி நாடாகியது.
- 1784 - அலாஸ்காவின் கோடியாக் என்ற இடத்தில் ரஷ்யா தனது குடியேற்றத்தை ஆரம்பிதத்து.
- 1877 - யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராக தமிழறிஞர் அருளப்ப முதலியார் நியமிக்கப்பட்டார்.
- 1888 - நஷ்னல் ஜியோகிரபிக் மகசின் (National Geographic Magazine) முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1893 - அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட தானுந்து முதன் முதலாகக் காட்சிப்படுத்தப்பட்டது.
- 1896 - பிரித்தானியாவின் அரச வம்சத்தில் அதிக காலம் ஆட்சியில் இருந்த பெருமையை விக்டோரியா மகாராணி பெற்றார்.
- 1934 - வேல்சில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 266 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - யூதர்களின் புத்தாண்டில் உக்ரேனின் வின்னிட்சியா நகரில் 6,000 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொல்லப்பட்டனர். இவரகள் அனைவரும் முதல் நாட்களில் கொல்லப்பட்ட 24,000 யூதர்களில் உயிர் தப்பியோராவர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ரஷ்ய இராணுவம் எஸ்தோனியாவின் தலைநகர் தாலின் நகரினுள் நுழைந்தனர்.
- 1955 - ஐக்கிய இராச்சியத்தில் ஐடிவி தொலைக் காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1960 - மாலிக் கூட்டமைப்பில் இருந்து செனெகல் விலகியதை அடுத்து சுடானியக் குடியரசு மாலி எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1965 - இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காஷ்மீர் தொடர்பாக இடம்பெற்ற போர் ஐ.நா.வின் போர் நிறுத்த அழைப்பை ஏற்று முடிவுக்கு வந்தது.
- 1970 - மலேசியாவின் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தனது பதவியை விட்டு விலகினார்.
- 1975 - ஐக்கிய அமெரிக்காவின் அதிபர் ஜெரால்ட ஃபோர்ட் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பினார்.
- 1980 - ஈரான் - ஈராக் போர்: ஈராக் ஈரானை முற்றுகையிட்டது.
- 1993 - ஜோர்ஜியாவின் பயணிகள் விமானம் ஒன்று சுகுமி என்ற இடத்தில் தீவிரவாதிகளால் சுட்டு வீழத்தப்பட்டதில் 108 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995 - நாகர்கோயில் பாடசாலை சிறார்களின படுகொலை,யாழ் நாகர்கோயில் பாடசாலை மீது 12:50 மணிக்கு இலங்கை விமானப் படையினர் நடத்திய குண்டுவீச்சில் 30 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1997 - அல்ஜீரியாவில் 200 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - ஆளுதே தமிழ், ஹிந்தி பீட்டாவிற்கு விடை கொடுத்து இறுதிப் பதிப்பை ஆரம்பித்ததோடு, மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் பதிப்பை ஆரம்பித்தது.

**பிறப்புகள்**

- 1930 - பி.பி.ஸ்ரீநிவாஸ், பழம்பெரும் திரைப் பட பின்னணி பாடகர. (இ. 2013)
- 1791 - மைக்கேல் பரடே, ஆங்கில அறிவியலாளர். (இ. 1867)

**இறப்புகள்**

- 1539 - குருநானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர். (பி. 1469)
- 2009 - எஸ். வரலட்சுமி, நடிகை, பாடகி .(பி. 1927)
- 2009 - ஆர். பாலச்சந்திரன், பேராசிரியர், கவிஞர்

**சிறப்பு நாள்**

- பல்கேரியா - விடுதலை நாள். (1908)
- மாலி - விடுதலை நாள். (1960)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 65 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 100 | 60 | 60 | 70 | 120 |
| தக்காளி | 45 | 50 | 40 | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 80 | 100 | 55 | 70 | 90 | 80 |
| கரட் | 80 | 100 | 70 | 100 | 120 | 160 |
| பூசணி | 50 | 20 | 25 | 25 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 30 | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 40 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 90 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 60 | 100 | 70 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 40 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 40 | 20 | 30 | 60 | 40 | 60 |
| லீக்ஸ் | 120 | 100 | 85 | 100 | 120 | 160 |
| பீற்றூட் | 40 | 20 | 30 | 30 | 40 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 90 | 100 | 90 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 200 | 130 | 80 | 120 | 120 |
| போஞ்சி | 150 | 200 | 140 | 160 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 30 | 50 | 50 | 40 |
| கீரை - 1பிடி | 40 | 10 | 25 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 200 | 300 | 300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 40 | 25 | 20-30 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 60 | — | — | 160 | — | 160 |
| முள்ளங்கி | 50 | — | 25 | 40 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 20 | 30 | — | 40 | 80 |

# இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதி மைத்திரியுடன் நியூயோர்க்கில் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 71 ஆவது பொதுச்சபை கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்கு நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனவுக்கும் இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் எம்.ஜே. அக்பருக்குமிடையில் நேற்று முன்தினம் நியூயோர்க் நகரில் சந்திப்பு இடம்பெற்றது.



இச் சந்திப்பில் இரு நாட்டு இராஜதந்திர உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அண்மையில் கஷ்மீரில் இடம்பெற்ற வன்முறையினால் பலர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும் இலங்கை மக்களின் சார்பிலும் அனுதாபங்களைத் தெரிவித்த ஜனாதிபதி, பிராந்தியத்திலுள்ள அனைவரும் இவ்வாறான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அச்சம்பவம் ஏற்படுவதற்கு காரணமான நிலைமை தொடர்பில் ஜனாதிபதிக்கு அமைச்சர் விளக்கமளித்தார்.

அவ்வாறான சிக்கலான நிலைமைகளில் மிகுந்த பொறுமையாகவும் கலந்துரையாடல்களூடாகவும் அவற்றை அணுகுவதன் மூலமே சாத்தியமான தீர்வுகளை பிரச்சினைகளுக்கு பெற்றுக் கொள்ள முடியுமென்று ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

இலங்கையில் சில கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதில் ஏற்பட்டிருக்கின்ற தாமதங்கள் தொடர்பாக சுட்டிக் காட்டிய இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர், அத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து அவற்றை முன்னெடுக்க துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் தான் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்தார்,

இவ் இருதரப்பு சந்திப்பின்போது இரு நாடுகளுக்குமிடையிலான மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் இரு அரசாங்கங்களும் மனிதாபிமான முறையில் இப்பிரச்சினையைப் பார்க்க வேண்டும் எனக்குறிப்பிட்ட ஜனாதிபதி, சட்டவிரோதமாக எல்லைதாண்டும் மீனவர்கள் கைது செய்யப்படும்போது அவர்களை சாத்தியமான வழிகளில் விரைவாக விடுதலை செய்வதற்கு அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை எல்லை தாண்டி மேற்கொள்ளப்பட்டு வரும் மீன்பிடி நடவடிக்கைகளால் சுற்றுச்சூழல் மற்றும் கடல் வளங்களில் ஏற்படும் நீண்டகால பாதிப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கமும் வடக்கின் மீனவர்களும் கவலையடைந்திருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

ஆகவே மீனவ சமூகத்தினரை உள்ளடக்கி இப்பிரச்சினைக்கான ஆரம்பத் தீர்வுகளை விரைவாக கண்டறிய வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அதற்கு மத்திய அரசின் உதவியினை அவர் வலியுறுத்தினார். (இ-7-10)

# அமெரிக்க நிறுவனம் இலங்கைக்கு உதவும்

(கொழும்பு)

**அமெரிக்காவின் (Millennium Challenge Corporation) நிறுவனம் தன்னுடைய ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்களுக்கு உதவி வழங்குவதற்காக இலங்கையினை தெரிவுசெய்துள்ளது.**

MCC நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி தனா ஜே ஹைடி ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் (Loews Regency) ஹோட்டலில் சந்தித்தார். 2016 டிசெம்பரில் இடம்பெறவுள்ள MCC நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் முன்வைக்கவுள்ள செயலாக்க அறிக்கையினை தயாரிப்பதற்காக தம்முடைய குழுவொன்று ஏற்கனவே இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக அவர இதன் போது தெரிவித்தார்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் செயற்றிட்டங்கள் எவை என்பது தொடர்பில் பணிப்பாளர் சபை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தீர்மானிக்கும் எனக் குறிப்பிட்ட ஹைடி, புத்தாயிரமாம் ஆண்டின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக முன்னெடுக்கும் பல செயற்றிட்டங்களுக்கு தமது நிறுவனம் உதவியளிக்கும் எனவும் தெரிவித்தார்.

அமெரிக்காவானது பல தசாப்தகாலமாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல செயற்றிட்டங்களுக்கு உதவியளித்து வருவதையும், அதிலும் குறிப்பாக இனறு பல்வேறு பரிமாணங்களில் செயற்படுத்தப்படும் மிகப்பெரிய செயற்றிட்டமான மகாவலி Hydro Electric செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு 1950களின் முற்பகுதியில் அமெரிக்கா உதவி அளித்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, MCC நிறுவனமானது தன்னுடைய ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவியளிப்பதற்கு இலங்கையினை தெரிவு செய்தமைக்காக தனது நன்றியினையும் தெரிவித்துக் கொண்டார். கடந்தஒன்றரை வருடகாலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு உலகம் அடையாளம் கண்டு கொண்ட மிகப்பிரமாண்டமான சாதனைகளுக்காக ஜனாதிபதிக்கு ஹைடி தனது பாராட்டுக்களை இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்தார். (இ-7-10)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 840

Search for people, places and things Nagendram Home

ராசி




அகில்




கதிர்




மது




அனு அனுஜன்




றொகான்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புரட்டாதி மாத இராசிபலன்கள்

## 17.09.2016-16.10.2016

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*உடன் இருப்பவர்களையும் வாட விடாமல் பார்த்துக் கொள்ளும் தனுசு ராசி நேயர்களே!*

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராயந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் குரு பகவான் 10இல் சஞ்சரிக்கின்றார். 10இல குரு வந்தால் பதவி மாற்றம் என்பது பழமொழி. ஆனாலும் வரும் மாற்றம் நல்ல மாற்றமாக அமைய வழிபாடுகள் கைகொடுக்கும். ஜென்மத்தில் செவ்வாய் இருப்பதால் முன்கோபம் கூடுதலாக வந்து இடையூறுக்ளை விளைவிக்கும். ஏழரைச் சனியிலும் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகின்றது. எனவே குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும்.

இருப்பினும் முதல் சுற்று நடப்பவர்களும், மூன்றாவது சுற்று நடப்பவர்களும் கூடுதல் கவனத்தோடு இருக்க வேண்டும். இரண்டாவது சுற்று நடப்பவர்களுக்கு பொங்கு சனி என்பதால் மங்கள ஓசை மனையில் கேட்கும் வாய்ப்பு உருவாகும். தங்குதடைகள் அகலும். தனலாபம் கூடுதலாக இருக்கும். குருவின் பார்வை 2ஆம் இடத்தில் பதிவது யோகம் தான். வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் இடத்தைக் குரு பார்ப்பதால் செல்வாக்கு எப்போதும போல இருக்கும். செயறபாடுகளும், திட்டங்களும் வெற்றி பெறும். நல்வாக்குச் சொல்பவர்கள் உங்கள் அருகிலிருந்து வளர்ச்சிக்கும், மனஅமைதிக்கும் வழிகாட்டுவர்.

புத்திரகாரகன் என்று வர்ணிக்கப்படும் குரு வலிமை இழந்து சுக்ரனோடும், சூரியனோடும் கூடியிருப்பதால் பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு மன அமைதியைக குறைக்கலாம். எதிரிகளின் தொல்லை அதி கரிக்கும். இதுபோன்ற நேரங்களில் குரு பிரீதி செய்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும் இடத்தில் ராகுவும், முன்னேற்றத்தை வழங்கும் மூன்றாமிடத்தில் கேதுவும் இருப்தால் நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்வது நல்லது.

ராசிநாதனாகவும், 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு பரிவர்த்தனை யோகம் பெற்ற கிரகமான சூரியனோடு இருப்பதால் அரசியல்வாதிகளுக்கு இது உன்னதமான நேரமாகும். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகளும், நல்ல பதவிகளும் கிடைக்கும். சகோதர வர்க்கத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது. வீடு கட்டுதல், கட்டிய வீட்டைப் பழுது பார்த்தல், திருமண மண்டபங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்றவை கட்டும் வாய்ப்புகள் உருவாகும். குறிப்பாக விரயச் சனியின் ஆதிக்க காலத்தில் வாகன மாற்றம் செய்வது நல்லது. பழைய வாகனங்களால் பழுதுச்செலவுகளும், சிக்கல்களும் ஏற்படலாம்.

### பதவி மாற்றங்களால் பலன் பெறும் நேரம்!

ஒன்பதில் சஞ்சரிக்கும் ராகு உன்னத வாழ்வமைத்துத் தர வாரம் தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வதோடு நவராத்திரியில் அம்பிகை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

செப்டெம்பர் 19ஆம் திகதி சுக்ரன் நீச்சத்திலிருந்து விடுபட்டுத் துலாம் ராசியில் அடியெடுத்து வைக்கின்றார். துலாம் ராசி சுக்ரனுக்குரிய சொந்த வீடாகும. இக்காலத்தில் வருமானப்பற்றாக குறை அகலும். வாய்ப்புகள் வந்து அலைமோதும். தனக்கும் செலவிடுவீர்கள், தர்ம காரியத்திற்கும் செலவிடுவீரகள. ஆடை, ஆபரணசேர்க்கை உண்டு. ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீரகள. உறவினர் வழியில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். ஊர மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும். வெளிநாட்டு யோகம் கைகூடும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள்.




**உச்ச புதனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 4ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறுகின்றார். தொழில்ஸ்தானம்எனப்படும 10ஆம் இடத்தில் ஸ்தானாதிபதி உச்சம் பெறும பொழுது தொழில் வளர்ச்சி கூடுதலாக இருககும். வருமானம் பல வழிகளிலும் வந்து சேரும. உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் முன்வந்து சுயதொழில் தொடங்குவர். லாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் இருமடங்காக வந்து சேரும் நட்பால் நல்ல காரியம் நடைபெறும். மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவம் நடைபெறும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 14ஆம் திகதி முதல் 12ஆம் இடத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். 6, 11 இற்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் தனாதிபதி சனியோடு இணையும் பொழுது வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். தேங்கிய காரியங்கள் விரைவில் நடக்கும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி வந்து சேரும். வெளிநாட்டிலிருந்து வரும அழைப்புகளைப் பரிசீலிப்பீர்கள். மனக்குழப்பம் அகலும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். இம்மாதம் துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி வழிபாட்டை மேற்கொள்வதோடு ராகு-கேது பிரீதி செய்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் செவ்வாய் பலம் நன்றாக இருப்பதால் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளும், உடனிருப்பவர்களும், உற்சாகத்தோடு வந்து உதவிசெய்வர். கடன் சுமை தீரும். கவலைகள் மாறும். இடம் வாங்குவதில், பத்திரப்பதிவில் இருந்த தடைகள் அகலும். இல்லத்தில் உள்ளவர்கள் உங்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பர். கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் அகலும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் ஏற்படும் பிரச்சினையை சமாளிப்பீர்கள். விநாயகர் வழிபாடும், துர்க்கை வழிபாடும் வெற்றியை வரவழைத்துக்கொடுக்கும்.

பணத் தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:

செப்டெம்பர் : 17, 18, 28, 29,

ஒக்டோபர் : 2, 3, 11, 12



*நெருங்கிப் பழகியவர்களுக்காக எதையும் செய்யுமளவிற்கு பாசம் கொண்டுள்ள மகர ராசி நேயர்களே!*

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்ககும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது. எனவே, குரு பார்க்கக் கோடி தோஷ நிவர்த்தி என்பதற்கேற்ப சகல முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கப் போகின்றது.

மூன்றாமிடத்திற்கு அதிபதியாக குரு விளங்குவதால் சகோதர வர்க்கத்தினர்களின் பாசத்திற்கும், நேசத்திற்கும் ஆளாக நேரிடும். தடுமாற்றங்கள் அகலும். தனவரவு திருப்தி தரும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் விதத்தில் இம்மாத கிரக நிலைகளின் சஞ்சார நிலை இருக்கின்றது.

மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். தொழில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா? என்ற மனக்குழப்பம் அதிகரிக்கும். பழைய தொழில் வெற்றிநடை போட்டாலும் புதிய தொழில் ஒன்றை தொடங்க வேண்டுமென்ற ஆர்வம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிரபார்த்தபடியே சலுகைகள் கிடைக்கும்.

சூரியன் இப்பொழுது 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது ஒருவழிக்கு யோகம் தான். அவரோடு குருவும், சுக்ரனும் இணைந்திருப்பதால் வீண் விரயங்கள் செய்ய அனுமதிக்கமாட்டீர்கள். சுபவிரயங்களை அடுக்கடுக்காக செய்ய இயலும். குறிப்பாக குழந்தைகளின் மண விழாக்கள், உடன்பிறப்புகளின் மண விழாக்கள், பெற்றோர்களின் மணி விழாக்கள், காது குத்து, சீமந்தம் போன்ற வற்றை நடத்துவதற்கான முயற்சி கைகூடும்.

வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு கைகூடிவரும். குருசந்திர யோகத்தோடு மாதம் தொடங்குவதால் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறப் போகின்றது. பணி நிரந்தமாகவில்லையே என்ற கவலை இனி அகலும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொண்டால் தடைக்கற்களையும், படிக்கற்களாக மாற்றிக் கொள்ள இயலும். அதுமட்டுமல்லாமல் 2இல் கேதுவும், 8இல் ராகுவும் இருப்பதால் சர்ப்ப

### மாலையும் வேலையும் மகிழ்ச்சியோடு வரும் நேரம்!

கிரகங்களின் ஆதிக்கமே மேலோங்கி இருக்கின்றது. வாக்குஸ்தானத்தில் கேது இருப்பது அவ்வளவு நல்லதல்ல. எனவே ராகு-கேதுகளுக்குப் பிரீதி செய்வதும் நல்லது. அதுமட்டுமல்லாமல் அஷ்டமத்தில் ராகு இருப்பதால் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். துயரங்கள் துள்ளி ஓடும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

செப்டெம்பர் 19ஆம் திகதி துலாம் ராசிக்குச் சுக்ரன் செல்கின்றார். 5, 10 இற்கு அதிபதி 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது. தொழில முன்னேற்றம் அதிகரிக்கும். தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சி வெற்றி பெறும். புதிய பங்குதாரர்கள் போட்டிபோட்டுக் கொண்டு வந்திணைய முன்வருவர். அதிகார வர்க்கத்தினரின் ஒத்துழைப்போடு புதிய பாதை உங்களுக்குப் புலப்படும். மதிப்பும், மரியா தையும் உயரும. பிள்ளைகள் வழியிலும் உதிரி வருமானம் கிடைக்கும்.




**உச்ச புதனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 4ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறுகின்றார். 9இல் புதன் உச்சம் பெறும் பொழுது, ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அன்பு நண்பர்கள் உதவிக்கரமாக இருப்பர். உடல்நலம் சீராகும். பெற்றோர் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. புதிய பதவிகள் அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு வந்து சேரும். பயணங்களால் பலன் கிடைக்கும் நேரமிது. குலதெய்வவழிபாடுகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 14ஆம் திகதி விருச்சிக ராசிக்கு சுக்ரன் செல்கின்றார். தொழில் ஸ்தானாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொட்டதெல்லாம் பொன்னாகும். தொல்லையெல்லாம் விலகி ஓடும். பட்ட கஷ்டத்திற்கு விடிவு காலம் வந்தது என்று சொல்லி மகிழ்வீர்கள. பணிச்சுமை குறையும். இனிக்கப் பேசும் நண்பர்கள் எளிதில் உங்கள் காரியத்தை முடித்துக கொடுப்பர். இம்மாதம் துர்க்கை, சரஸ்வதி, லட்சுமி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் உங்கள் எண்ணங்கள் எல்லாம எளிதில் நிறைவேறும் மாதமாகும். ஆரோக்கியத் தொல்லை அடியோடு அகலும். பாராட்டு மழையில் நனைவீர்கள். பணிகளிலிருந்த தொய்வு மாறும். வருமானம் எதிர்பார்த்ததை விட கூடுதலாகவே வரும். கணவரின் முழுமையான அன்பிற்கு பாத்திரமாவீர்கள். கலகலப்பாகப் பேசும் பிள்ளைகளுக்கு கல்யாணம் செய்து வைக்கும் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கலாம். தாய் வழிச் சொத்துக்களும், தனலாபமும் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். நவராத்திரி விரதமிருந்து முப்பெரும் தேவியரை வழிபட்டு ஒப்பற்ற வாழ்க்கை அமையும்.

பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்

செப்டெம்பர்: 19, 20, 30,

ஒக்டோபர் : 1, 5, 6, 7, 13, 14

(தொடரும்)

# மகிந்தவின் புதிய கட்சி ஐக்கிய மக்கள் முன்னணி ஒக்டோபர் 8ல் ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய கட்சி எதிர்வரும் 8 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

அக்கட்சிக்கு "ஐக்கிய மக்கள் முன்னணி" என பெயரிடப்படவுள்ளதுடன் வெண்தாமரை மலர் சின்னமாக அமையவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி ஏற்பாடு செய்துள்ள "போராட்டத்திற்கு உயிரூட்டும் புதிய மக்கள் பேரணி" எனும் தொனிப்பொருளிலான பேரணி எதிர்வரும் எட்டாம்



திகதி எகலியகொடவில் நடைபெறவுள்ளது.

அதில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உட்பட ஏராளமானோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதன்போதே புதிய கட்சிக்கான சம்பிரதாயபூர்வ அறிவித்தல் விடுக்கப்படவுள்ளது.

மேலும் புதிய கட்சியின் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் அடங்கிய கட்சிப் பிரகடனமும் அதன்போது வெளியிடப்படவுள்ளது.

புதிய கட்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் உள்ளடங்கலாக ஏனைய சில அமைப்புகளும் இணையவுள்ளதாகக் தெரியவருகிறது.

இதேவேளை அக்கட்சியில் சகல இனக் குழுமங்களையும் அடையாளப்படுத்தும் வகையில் பிரத்தியேகக் குழுக்கள் அமைத்து செயற்படுத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது. (இ-7-10)

# இளைஞனின் உயிரிழப்புக்கு பொலிஸாரே பொறுப்பு

## சட்டம், ஒழுங்கு அமைச்சர் பாய்ச்சல்

(கொழும்பு)



**பொலிஸ் சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்கு விதியானது புசல்லாவ இளைஞன் உயிரிழந்த சம்பவத்தின் போது பின்பற்றப்படவில்லை என சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.**

இந்தச்சம்பவம்தொடர்பான நீதவான் விசாரணை நாளை 23 ஆம் திகதி மீண்டும்நடைபெறும்போது அனைத்து சாட்சியங்களும் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடமையில்இருந்தபொலிஸ் அதிகாரிகள் தமது கடமையில் இருந்து தவறியிருந்தாலோ அல்லது ஒழுக்கத்தை மீறி நடந்திருந்தாலோ உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

புசல்லாவ பொலிஸ் நிலைய சிறைக்கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது நடராஜா இராமச்சந்திரன் என்ற இளைஞன் கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் 23-2ஆம் இலக்க நிலையியல் கட்டளையின் கீழ் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த எம்.பியான தினேஷ் குணவர்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் சாகல ரத்நாயக்க இந்த விடயங்களை தெரிவித்தார். (இ-7-10)

# அரச வைத்திய அதிகாரிகளுக்கு சூரியன், சந்திரனை வழங்க முடியாது

## கல்வி அமைச்சர் கருத்து

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் சாதாரண மாணவர்களின் உரிமைகளை மீறும் வகையில் செயற்படுகின்றது. பல்வேறு நாடகங்களை அரங்கேற்றி வருகின்றது. சுயலாபத்துக்காக அவர்கள் கோரும் சூரியனையும் சந்திரனையும் எம்மால் வழங்கமுடியாது என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அமைச்சுக்கள் தொடர்பான விசேட அறிவிப்பை வெளியிடும் நேரத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் அகிலவிராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் கல்வி அமைச்சுக் கட்டடத்துக்குள் சட்ட விரோதமாக நுழைந்து இரவு முழுவதும் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டியில் உணவு மற்றும் குடிபானம் கொண்டு சென்றமைக்கான சாட்சிகள் இருக்கின்றன. இடமாற்றம் பெற்றுச்செல்லும் அரசாங்க வைத்தியர்களின் பிள்ளைகளுக்கு அரசாங்க பாடசாலைகள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி கடந்தவாரம் கல்வி அமைச்சுக்குள் நுழைந்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் அன்றையதினம் நடைபெறவிருந்த பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான சித்திரப் போட்டியின் பரிசளிப்பு விழாவையும் நடக்கவிடாது குழப்பி இரவு முழுவதும் கல்வி அமைச்சு கட்டடத்துக்குள் தங்கியிருந்தனர்.

இவர்கள் தமது பிள்ளைகளின் பாடசாலைப் பிரச்சினைக்காக ஏனைய மாணவர்களின் உரிமைகளை மீறும் வகையில் நடந்து கொண்டதுடன் தமது சொந்தத் தேவைக்கான போராட்டத்துக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டியொன்றையும் கல்வி அமைச்சுக்குக் கொண்டு வந்திருந்தனர். நோயாளர்களை காவிச் செல்லும் அம்புலன்ஸ் வண்டியில் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசாங்க வைத்திய அதிகாரிகளுக்கு உணவு மற்றும் குடிபானம் கொண்டுவரப்பட்டமைக்கு தெளிவான சாட்சிகள் உள்ளன.

இவ்வாறான போராட்டமொன்றை முன்னெடுத்து ஊடகங்களுக்கு நாடகமாட அவர்கள் முயற்சித்தனர். கடந்த மார்ச் மாதம் முதல் இன்றுவரை பிரபல பாடசாலைகளுக்கு உள்வாங்கிய மாணவர்களின் பட்டியலை வெளியிடுமாறு மருத்துவ சங்கம் சவால் விடுகிறது.

நாம் 1.5.6 ஆம் தரங்களுக்கு மாணவர்களை உள்வாங்கவில்லை. எமக்கு நெருக்கமானவர்களின் பிள்ளைகளை பாட சாலைகளுக்கு சேர்க்கவில்லை.

அனைத்து செயற்பாடுகளும் வெளிப்படைத் தன்மையுடனேயே மேற்கொள்ளப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மருந்துகளுக்கான விலைச்சூத்திரம் 23-ல் வெளியீடு

(கொழும்பு)

மருந்துவிலைகளை குறைப்பது தொடர்பான விலைச்சூத்திரம் நாளை வெளியிடப்பட இருப்பதாக சுகாதார போசாக்கு அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வாய்மூல விடைக்காக டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்.

ஔடத கொள்கையை வெளியிட்ட சேனக பிபிலேயின் நினைவு தினம் 23 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அவரை கௌரவிக்கும் வகையில் அன்றைய தினம் இது குறித்த அறிவிப்பை வெளியிட இருக்கிறோம் என்றார். மருந்து விலைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான ஔடத



கட்டுப்பாட்டு சட்டம் சில மாதங்களுக்கு முன் நிறை வேற்றப்பட்டது. இதனூடாக நிறுவனமொன்று உருவாக்கப்பட்டு மருந்து விலைகளை மட்டுப்படுத்த விலைச்சூத்திரம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விலைச் சூத்திரம் வெளியிடப்பட்ட பின் சந்தையில் மருந்து விலைகள் பெருமளவில் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7-10)

# மோசடியான முறையில் பரீட்சைக்கு தோற்றியிருந்தால் பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் நீக்கப்படுவர்

மோசடியான முறையில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியமை நிரூபிக்கப்பட்டால் அவ்வாறான மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்படுவார்கள் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமக்கு உரிய மாவட்டத்திலிருந்து வெளியே வேறு மாவட்டங்களில் பரீட்சைக்குத் தோற்றி அதன் ஊடாக பல்கலைக்கழக அனுமதி பெற்றுக்கொண்டமை உறுதி செய்யப்பட்டால் அந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்படுவார்கள்.

பல்கலைக்கழக அனுமதியின் போது விண்ணப்பதாரிகள் வழங்கும் தகவல்கள் பொய்யானவை என நிரூபணமானால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை பல்கலைக்கழகத்திலிருந்து நீக்க மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

இதன்படி, இம்முறை பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் எவரேனும் வெளி மாவட்டங்களின் ஊடாக போலியான தகவல்களின் அடிப்படையில் பரீட்சைக்கு தோற்றி அனுமதி பெற்றுக் கொண்டிருந்தால் அவர்களும் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்படுவர்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாதம் வரையிலான மூன்றாண்டு காலப் பகுதிக்கு மாணவர்கள் எந்த மாவட்டத்தில் கல்வி கற்றார்களோ அந்த மாவட்டத்தின் அடிப்படையில் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டம் நிர்ணயிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். போலி தகவல்களை வழங்கிய மாணவர்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பல்கலைக்கழகத்தை விட்டு நீக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்திய வீரவன்ச

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மீண்டும் ஒரு சர்ச்சையை தோற்றுவித்துள்ளார். குறிப்பாக, அமெரிக்கா வோஷிங்டனில் உள்ள ஹில்டன் ஹோட்டலில் ஐரோப்பிய புலிகளின் வலையமைப்பில் உள்ள 10 உறுப்பினர்கள் தங்கியிருப்பதாகவும், அவர்களுக்கான போக்குவரத்து, தகவல் தொடர்பாடல் மற்றும் ஹோட்டலில் தங்குவதற்கான கட்டணங்களை அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகமே வழங்கியதாக விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது, இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரனுடன் அமெரிக்காவில் சுமார் நான்கு மணித்தியாலங்கள் உரையாடியுள்ளார் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் வடக்கில் உள்ள 78 ஏக்கர் நிலமானது சுரேன் சுரேந்திரனுக்குரியது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

# சிவத்திரு.க.வைத்தீசுவரக் குருக்கள்



## சில நினைவுகள்

சிவத்தமிழ் வித்தகர், பண்டிதமணி, தத்துவ கலாநிதி, செந்தமிழ் ஞாயிறு சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் 22.04.2015 அன்று தமது 99 அகவையில் மறைந்தது தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவர் அறநெறி தவறாத அந்தணர் வழியில் க. கணபதீசுவரக்குருக்கள், சிவயோகசுந்தராம்பாள் தம்பதியினருக்கு 22.09.1916 இல் ஈழத்துச் சிதம்பரம் காரைநகரில் தோன்றியவர்.

அவரைப்பற்றி அதி. வண.கலாநிதி எஸ். ஜெபநேசன் அன்றொரு சமயம் குறிப்பிடுகையில், 'குருக்கள் நாட்டின் தலைசிறந்த செல்வம். அவருடன் வாழ்கின்ற காரைநகர் மக்கள் பாக்கியசாலிகள்' என்றார். பிற்காலத்தில் அந்த மூதறிஞர் கந்தரோடையில் வாழ்ந்து வந்ததால் அந்தப் பாக்கியம் இங்குள்ள மக்களுக்கும் கிடைத்தது எமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதம். அவர் ஒரு பழுத்த பழம் மட்டுமல்ல. பயன்தரும் மரமும் கூட. அவர் வித்தகம் கந்தையா-திருவாசகம் கந்தையா என்றெல்லாம் அழைக்கப்பெற்ற சுன்னாகத்தின் பெரும் புலவர்களில் ஒருவர். அவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கராக இருந்தவர். சுவாமி விபுலானந்தர், முத்தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி, பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை என்போருக்குச் சிலகாலம் தமிழ் கற்பித்தவரும் கூட. பண்டைய நல்வினையால் இவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது எனக்கூறிக்கொள்ளும் குருக்கள் ஐயா தமக்குத் திருவாசகம் பற்றி வித்தகர் விளக்கமளித்தமையையும் நன்றியுடன் நினைவுகூரத் தவறுவதில்லை.

போகும் போதும் வரும் போதும் திருவாசகத்தைப் பற்றி பேச்சுத் தான் நிகழும். சில சந்தர்ப்பங்களில் இவர் தம்மை மறந்த நிலையில் தெருவிலே ஓர் இடத்தில் நின்றுகொண்டு திருவாசகத்தைப் பற்றிச் சொல்லுவார்.

தமிழ்ப் பித்தராகத் திகழ்ந்த குருக்கள் ஐயா, தமது ஆரம்பக்கல்வியை காரைநகர் வலந்தலை அ.மி.பாடசாலையில் மேற்கொண்டதுடன், காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை, காரைநகர் இந்துக்கல்லூரி, அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலை, சுன்னாகம் பிராசீன பாடசாலை ஆகியவைகளிலும் கல்வி கற்றார். பரமேசுவரா பண்டித ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் பண்டித பரீட்சையிலும் பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பரீட்சையிலும் சித்தி பெற்றவர்.

1935 ஆம் ஆண்டு சுன்னாகம் பிராசீனப் பரீட்சையில் படிக்கும் போது வித்துவான் சி. கணேசையாவுக்கு ஆசிரியராக வாய்த்தார். பாடசாலைகள் இல்லாத நாட்களில் வறுத்தலை விளானிலுள்ள ஐயரின் வீட்டுக்கே சென்று திருவாசகத்தின் சில பகுதிகளைக் கற்றுத் தெளிவு பெற்றததை ஐயா நன்றியுடன் சொல்கிறார். குருக்கள் 1940இல் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் தமது ஆசிரியப் பணியைத் தொடங்கி வேறு சில பாடசாலைகளிலும் பணியாற்றி 1971 இல் ஓய்வு பெற்றவர். விவேகானந்தாவில் பணியாற்றிய காலத்தில் அவர் அகில இலங்கை சைவசமயப் பரீட்சைக் குழுவின் உறுப்பினராகி அந்தச்சபையின் சார்பில் அவர் ஆன்மீகப் பணி ஒன்றையும் மேற்கொண்டார். அப்போது ஞாயி ற்றுக்கிழமைகள் தோறும் வெலிக்கடைச் சிறைச் சாலைக்குச் சென்று அங்குள்ள தமிழ்க் கைதிகளுக்குச் சமயச் சொற்பொழிவாற்றி அவர்களின் தூயவாழ்வுக்கும் பேருதவி புரிந்தார்.

அந்தக்காலப்பகுதியில் இவர் தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலே பகுதி நேர உதவி ஆசிரியராகப் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். பரந்தன் பகுதியில் அவர் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் வீரகேசரியின் கரைச்சி நிருபராகவும் இருந்திருக்கிறார். இவைகளால் ஐயா நவீன பத்திரிகைத் தொடர்பு அனுபவங்களும் வாய்க்கப் பெற்றிருந்தார்.

மக்களின் துயரங்களை வெளிப்படுத்துவதில் ஆர்வம் காட்டிய வைத்தீசுவரக்குருக்கள் ஆசிரியத் தொழிலோடு பத்திரிகை-ஊடகத்துறையிலும் நிறைந்த ஆர்வம் காட்டியவர். தமிழ் மக்களின் தொன்மைச் சிறப்புக்களையும் பாரம்பரிய மேன்மைகளையும் கட்டுரைகளாக பத்திரிகைகளில் எழுதியவர். அத்துடன் அவர் தமக்குப் பிடித்த தாம் முயன்று தேடி வைத்திருந்த பிற ஆக்கங்களையும் அவை செய்ய வேண்டிய பணிகளையும் அடிக்கடி அவர் சொல்லுவார்.

குருக்கள் ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம், பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு, பெரிய புராணம்-கிருநகரப்படல உரை, காரைநகரில் சைவ சமய வளர்ச்சி போன்ற பல நூல்களின் ஆசிரியராவார். அத்துடன் பல நூல்களின் பதிப்பாசிரியருமாவார்.

அவரின் பதிப்புப் பணியின் சிகரமாக பின்னர் வெளிவந்த திண்ணபுர அந்தாதி நூலைக் குறிப்பிடலாம். கார்த்திகேயப் புலவரது ஆக்கங்களில் தலைசிறந்ததாகக் கருதப்படும் இந்த ஆக்கம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆகிய திண்ணபுரத்தில் கோயில் கொண்டருளிய அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறையும் சுந்தரேசப் பெருமான் மீது பாடியதாகும்.

ஏற்கனவே இந் நூலை முதலில் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். இந்த நூலின் மூன்றாம் பதிப்பினை கனடா சைவ சித்தாந்த மன்றத் தலைவர் (அன்பு நெறி ஆசிரியர்) தி. விசுவலிங்கம் மூலமாக வெளியிட வைத்திருக்கின்றார். அவரின் அந்தப்பணிக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பெரும் தொகை கொடுத்து அந்த நூற் பிரதிகளை அப்பொழுது கொள்முதல் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

காரைநகரில் 25.12.2014 இல் நடைபெற்ற மணிவாசகர் சபையின் பவளவிழா மலர் வெளியீட்டு விழாவில் குருக்கள் ஐயா என்றுமில்லாத உற்சாகத்துடனும் பூரிப்புடனும் கலந்து கொண்டமை நினைவுக்கு வருகிறது.(அதற்குப் பின்னர் தமக்கு இயலாமற் போகும் என்று நினைத்தாரோ என்னவோ) அந்த நிகழ்வு மலர் வெளியீட்டு விழா என்பதுடன் மணிவாசகர் சபையின் நிறுவுனரான குருக்களையும் அவரின் பல்துறைப் பணிகளையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவாகவும் அமைந்தது சிறப்புக்குரியது.

வாழ்க அவர் புகழ்! வாழும் அவர் புகழ்!

கலாபூஷணம்
பொ.சண்முகநாதன்

# தமிழ் சினிமா வரலாறு

256

## ஜெமினி இல்லாமல் மகள் திருமணத்தை நடத்தினார் சாவித்திரி

திருமணத்துக்கு வந்திருந்தவர்களை ஜெமினி கணேசனின் செயலாளர் ஜெமினி மகாலிங்கம் வரவேற்றார்.

### ஜெமினியின் சொந்தப் படம்

ஜெமினிகணேசன் சொந்தமாகத் தயாரித்த ஒரே படம் "நான் அவனில்லை" எதிர்பார்த்தபடி படம் ஓடாததால் அவர் பெரிய ஏமாற்றம் அடைந்தார்.

மென்மையான கதாபாத்திரங்களில் சிறப்பாக நடித்து புகழ் பெற்றவர் ஜெமினிகணேசன். தன் திறமை முழுவதையும் எடுத்துக்காட்டக் கூடிய ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க விரும்பினார். அதை சொந்தமாகத் தயாரிக்க எண்ணினார்.

### நான் அவனில்லை

தன் விருப்பத்தை டைரக்டர் கே.பாலச்சந்தரிடம் கூறினார்.

ஜெமினியின் பலதரப்பட்ட திறமைகளையும் வெளிப்படுத்தக்கூடிய கதை உருவாயிற்று. அது தான் "நான் அவனில்லை".

பல்வேறு தோற்றங்களில் பல்வேறு மொழிகளைப் பேசி பல பெண்களை திருமணம் செய்யும் கதாபாத்திரம். கடைசியில் பொலிஸில் பிடிபட்டு விசாரணை நடைபெறும் நீதிமன்றிலேயே மரணம் அடைவார். இறப்பதற்கு முன் சொல்லும் ஜீசஸ் என்ற வார்த்தையின் மூலம் கதாநாயகன் உண்மையில் யார் என்பது தெரியவரும்.

மகள் நாராயணி பெயரிலேயே ஸ்ரீநாராயணி பிலிம்ஸ் என்ற படக்கம்பனியை தொடங்கி இப்படத்தை ஜெமினி தயாரித்தார். மைசூரில் இருக்கும் பிரிமியர் ஸ்ரூடியோவில் படப்பிடிப்பு நடந்தது.

ஜெமினிகணேசனுக்கு ஜோடியாக ஜெயசுதா உட்பட பல பெண்கள் நடித்தனர். வசனம் எழுதி கே.பாலச்சந்தர் இயக்கினார். இசை எம்.எஸ்.விஸ்வநாதன்.

படப்பிடிப்பு முழுவதும் மைசூரிலேயே நடைபெற்றது. 07-06-1974 இல் படம் வெளிவந்தது.

### ஏமாற்றம்

படத்தின் "ரிசல்ட்" ஜெமினிக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது.

இது பற்றி ஜெமினிகணேசன் எழுதியிருப்பதாவது, "நேசமும் பாசமும்" உள்ள வேடங்களில் மட்டுமே நான் நடித்து வந்தேன். முரட்டு சுபாவமும் வில்லத்தனமும் நிறைந்த வேடங்களை ஏற்று நடிக்கும் வாய்ப்பை "நான் அவனில்லை" உருவாக்கித் தந்தது.



சொந்தமாக தயாரித்த படம் என்பதோடு என் திறமை முழுவதையும் வெளிக்காட்ட எனக்கு சவாலாக அமைந்த படம் என்றும் இதைச் சொல்லலாம். படம் வெளிவந்த பிறகு பெயரையும் புகழையும் அள்ளித் தரும் என்று எதிர்பார்த்து உயிரைக் கொடுத்து நடித்த எனக்கு மிஞ்சியது ஏமாற்றம் தான்.

அந்த படத்தில் நடிப்பதற்காக 1974 ஆம் ஆண்டு சிறந்த நடிகனாக "பிலிம்பேர்" விருது கிடைத்தபோது என் மனதுக்கு ஆறுதலாக இருந்தது.

இவ்வாறு ஜெமினிகணேசன் கூறியுள்ளார்.

படப்பிடிப்பிற்காக பெங்களூர் சென்ற நடிகை சாவித்திரி அங்கு ஹோட்டல் அறையில் மயங்கிக் கிடந்தார்.

(தொடரும்)

உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்து கொள்கிறான். – நார்மன் வின்சென்ட் பீல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எழுதும் மடல்

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு அன்பு வணக்கம். எங்கள் மண்ணின் பெரும் சொத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போதும், எங்கள் உரிமையைக்காப்பாற்ற என்று நினைத்த காலம் ஒன்று இருந்தது.

ஆனால் இன்று நிலைமை அதுவன்று. 1990 களில் மறுமலர்ச்சிக் கழகம் என்ற மாணவர் அமைப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கியது.

அந்த அமைப்பில், பட்டப்படிப்பை நிறுத்திவிட்டு மண் மீட்புக்காக சென்று உயிர் நீத்தவர்களின் புகைப்படங்கள். அந்த புகைப்படங்கள் நெஞ்சை நெருடியதால் மண் மீட்புப் போருக்குச்சென்ற மாணவர்கள் இப்படியாக ஒரு வரலாறு இன்று புதைபொருளாகி விட்டது.

புதைந்துபோன அந்த வரலாறு இனி யாராலும் நினைக்கப்படமாட்டாது என்று தான் நினைக்க முடிகிறது. இது ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர்கள் சொன்னால் மட்டுமே நாங்கள் ஆதரவு தருவோம் என்று தமிழ் மக்கள் கூறிய ஒரு காலமும் இருந்தது.

ஆனால் இன்று எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயங்களில் தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பது போல நடந்துகொள்வதைப் பார்க்கும் போது நெஞ்சு அடைத்துவிடுகிறது.

இறைவா! இப்படியொரு சூழ்நிலை ஏன்தான் ஏற்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளில் இருக்கக் கூடிய ஒரு சிலர் விலை போனதால் அத்தனை மாணவர்களும் உறங்கி விட்டார்களா என்ன?

அன்புக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களே! உங்கள் உறவுகளில் எத்தனையோ பேர் இன்றும் முள்ளிவாய்க்காலில் இழந்துபோன தங்களின் பிள்ளைகளை நினைந்து கண்ணீர் விடுவது நீங்கள் அறியாதது அல்ல. யுத்தம் தந்த இழப்புக்களின் துயரங்களை நீங்கள் அனுபவிப்பதும் நாங்கள் அறியாதது அல்ல.

இத் துன்பங்கள் எங்கள் இனத்தை கசக்கிப் பிழிந்துவிட்டது என்பது மட்டும் தெரிகிறது. உங்களோடு இருக்கக் கூடிய சிலர், மாணவர் அமைப்புக்களை திசை திருப்புகின்றனர் என்பது அறியப்படாத விடயமன்று.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்லமுடியும் நீங்கள் ஒவ்வொருவரும் ஒன்றை நினைத்தால் அதனை யாராலும் தடுத்துவிட முடியாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களே! இங்கு குறிப்பிடப்படும் விடயம் உங்களை உசுப்பேத்துவதற்கானதன்று. மாறாக நாம் அனைவரும் இந்த மண்ணில் ஒற்றுமையாக வாழ்வதற்கானது.

சிங்கள மாணவர்களே! நாம் ஒரு போதும் உங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. நீங்கள் எங்கள் சகோதரர்கள். நீங்கள் அனுபவிக்கின்ற உரிமைகளை, ஆட்சி அதிகாரங்களை நாங்களும் அனுபவிக்க வேண்டும் என்று கேட்பது தவறா? அதில் நியாயம் இல்லையா?

உண்மையில் நீங்கள் போதும் வடபுலத்து தமிழ் மக்களின் அவல வாழ்வை தென்பகுதியில் எடுத்துரைப்பதற்கு. இருந்தும் உங்களையும் சில சக்திகள் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றன.

இல்லையென்றால் நிச்சயம் நீங்கள் தமிழ் மக்கள் வாழும் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அவர்களின் அவலத்தை அறிந்திருப்பீர்கள்.

சட்டவிரோதமாகப் புத்தர் சிலை அமைக்கும் இடங்களைப் பார்த்து இதென்ன அநியாயம் என்று கேட்டிருப்பீர்கள். என்ன செய்வது எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று நினைக்கக் கூடிய உங்கள் தூய மனங்களிலும் பேரினவாத நஞ்சு விதைக்கப்பட்டுள்ளன. இவை உங்களில் முளைக்காமல் கருகிப்போக வேண்டும் என்பதே நம் வேண்டுதல்.

இந்த நாட்டில் அமைதி, சாந்தி, சமதானம் ஏற்பட வேண்டும். அதற்காகவே தமிழ்மக்கள் தங்கள் கோரிக்கைகளை அகிம்சை வழியில் பேரணி என்ற வழிமுறையில் அரசிற்கும் உலகிற்கும் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பேரணியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஒட்டுமொத்த மாணவர்களும் குறிப்பாக சிங்கள மாணவர்களும் கலந்து கொள்ளும்போது தமிழ் மக்களின் உரிமைக்காக சிங்கள மாணவர்கள் குரல்கொடுத்தனர் என்ற செய்தி இந்த நாட்டில் இரக்கத்துடன் கூடிய மாற்றங்களை ஏற்படுத்தும்.

ஆகையால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களே! தமிழ் மக்கள் பேரவை நடத்தும் பேரணியில் இணைந்து கொள்ளுங்கள். உங்கள் இணைவு இந்த நாட்டில் ஒரு புதிய மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்தும். இது சத்தியம்.

# இந்தோனேசியாவின் ஜாவா தீவில் மழை, வெள்ளத்துக்கு 19 பேர் பலி!

(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டின் ஜாவா தீவில் கொட்டித் தீர்த்த தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கிற்கு 19 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தோனேசியா நாட்டில் உள்ள ஜாவா தீவின் பல பகுதிகளில் கடந்த இருநாட்களாக பலத்த மழை தொடர்ந்து பெய்தது.

குறிப்பாக, கருட், சுமேடாங் மாவட்டங்களில் கடந்த 24 மணிநேரமாக பெய்த தொடர்மழையால் பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து பாய்ந்து வருகிறது.

இம்மாவட்டங்களுக்குட்பட்ட சுமார் 100 கிராமங்களை சேர்ந்த மக்கள் தங்களது வசிப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

கருட் மாவட்டத்தில் வெளளம் மற்றும் நிலச்சரிவு சார்ந்த விபத்துகளில் சிக்கி 8 மாதக்கைக்குழந்தை உட்பட 6 குழந்தைகளும், 7 பெண்களும் உயிரிழந்தனர்.

சுமேடாங் மாவட்டத்தில் ஆறுபேர் பலியாகினர்.

இரு மாவட்டங்களிலும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டும், நிலச்சரிவில் சிக்கி யும் காணாமற்போன பத் துக்கும் அதிகமானவர்களை மீட்கும் நட்வடிக்கையில் பேரடர் நிவாரணப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7-10)

# முதன் முறையாக ஐ.நா. பொதுச் சபை கூட்டத்துக்கு தாமதமாக வந்த ஒபாமா

(நியூயோர்க்)

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.நா. பொதுச்சபை கூட்டத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தாமதமாக வந்தார்.

ஐ.நா. சபை ஆண்டு பொது சபை கூட்டம் நேற்று முன்தினம் நியூயோர்க்கில் தொடங்கியது. தொடக்க நாளன்று பிரேசிலுக்கு அடுத்தடியாக அமெரிக்க ஜனாதிபதி பேச வேண்டும்.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று முன்தினம் கூட்டம் தொடங்கிய பிறகு தாமதமாக வந்தார். அதனால் அவர் பிரேசிலுக்கு அடுத்தபடியாக பேச முடியவில்லை.

ஒபாமா வராததால் சாட் நாட்டு பிரதிநிதியை 2 ஆவதாக பேசும்படி ஐ.நா.சபை தலைவர் அழைத்தார். அதன மூலம் இவர் ஐ.நா.சபை வரலாற்றில், 2 ஆவதாக பேசும் மரபை இழந்த அமெரிக்க ஜனாதிபதி ஆனார். (இ-7-10)

## விமானங்கள் மூலம் குண்டு வீசி

# படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவு தினம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மகா வித்தியாலயத்தின் மீது இலங்கை வான் படை விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று வியாழக்கிழமைஅனுஷ்டிக்கப்படும்.

1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி விமானங்கள் வீசிய குண்டுகளில் சிக்கி இருபத்து இரண்டு மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அவர்களின் 21 ஆவது ஆண்டுநினைவுதினம் இன்று பாடசாலையில் அனுஷ்டிக் கப்படும். மாணவர்களின் நினைவாக கடந்த வருடம் அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் மலரஞ்சலி இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

# பெறுபேறுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட கலைமாணி பகுதி I 2012 பரீட்சைப் பெறுபேறுகள் 19.09. 2016 இல் வெளியாகியுள்ளன. 22.09.2016 வியாழக்கிழமை தொடக்கம் பரீட்சார்த்திகள் தமது பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் மீள் பரீட்சார்த்திகள் உடனடியாக மீள்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ)

# கஞ்சாவுடன் கைதான இளைஞன் 30ம் திகதி வரை விளக்கமறியலில்

(கரணவாய்)

கஞ்சா பைக்கற்றுக்களுடன் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்நபர் முள்ளிப்பகுதியில் நிற்பதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸார் 19 ஆம் திகதி இரவு 7 மணியளவில் அந்நபரை மடக்கிப்பிடித்து சோதனையிட்டபோது 1500 மில்லிகிராம் கஞ்சா காணப்பட்டது.

அவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது அவரை 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.(இ-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில் உடுப்பிட்டி VC, நச்சிமார்கோவிலடி, எள்ளங்குளம், இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதிதாசன் வாசிகசாலையடி, கம்பரமலை, பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி வாசிகசாலைசந்தி, வல்லைவீதி, பொககணை, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா, அக்கரை, பாரதி வீதி, மாலுசந்தி, வதிரி சந்தி, இரும்புமதவடி, சக்களாவத்தை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, தோணிக்கல் சிவன்கோவில் பிரதேசம், குட்செட்வீதி, பெரிய பூந்தோட்டம், பெரியார்குளம், தெற்கிலுப்பைக்குளம் கிராமம், கொம்புவைத்தகுளம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



# சத்திய தரிசனம்

## தீயதை நல்லதெனக் கருதாதே

❖ மனம் கற்பனைகட்டும் புத்தி மாறாட்டங்களுக்கும் உட்பட்டது. வெளிச்சக் குறைவில் கயிற்றைப் பாம்பென நினைத்துப் பயப்படுகிறாய். விளகது வந்ததும் பாம்பு அல்ல என்று கண்டு கொள்கிறாய். அங்கு எப்போதும் கயிறே இருந்தது. ஆனால், மனிதனின் கற்பனையில் பாம்பு என்ற சிந்தனை ஏற்பட்டது.

❖ கண்ணாடியை உன் எதிரே பிடிக்கும்போது அதில் உன் உருவம் பிரதிபலிக்கிறது. உருவம் கண்ணாடியுள் இருப்பதல்ல. கண்ணாடியின் பின்னே பூசப்பட்ட பாதரசத்தால் பிரதிபலிப்பைக் காண்கிறோம். அது உங்கள் உண்மையான பிரதிபலிப்பு என்று நம்புகிறீர்கள். அதுபோலவே, இயற்கை என்ற மிகப் பெரும் கண்ணாடியில் காணும் பலதிறப்பட்ட பொருட்களை உண்மையென மதிக்கிறீர்கள். அவையாவுமே தெய்வீகத்தின் வேறுபட்ட வடிவங்கள்.

❖ நஞ்சை கரும்புச் சாறு என்று நினைத்து தவறுதலாக குடித்தால் ஆபத்தானதுதான். எனவே தீய ஒன்றை நல்லதென்று செய்தாலும் விளைவு தீயதாகவே இருக்கும்.

❖ இந்த உலகம் கடவுள் படைத்த மிகப்பெரிய காட்சிக்கூடம். இதில் அனைவரும் உள்ளே வருகின்றனர். விரும்பியதைப் பற்றிப் பேசுகின்றனர். சிலருக்கு வேலை வேண்டும். சிலருக்குச் செல்வம் வேண்டும். ஆனால், தெய்வீகத்தை விரும்புபவருக்கு பிரபஞ்சமே அவர்களுடையதாகிறது.


❖ மனிதனுக்காக கடவுள் பிரபஞ்சத்தில் அனைத்தையும் படைத்தான். தனக்கென எதுவும் வைத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொரு உயிருக்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. விரும்புவதை அனுபவிக்க முழுச் சுதந்திரம் உண்டு. ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. ஒவ்வொரு செயலுக்கும் தொடர்பான மறு விளைவு உண்டு.

# இருபாலை வி.கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டி

## காமாட்சி சம்பியன்















இருபாலையின் கிரிக்கெட் சமரில் விதுசன். சிந்துவின் அதிரடியால் சிகரகிண்ணத்தினை கைப்பற்றியது காமாட்சி விளையாட்டுக்கழகம்.

இருபாலை விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் சங்கானை கிங்ஸ்சை எதிர்த்து காமாட்சி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட தீர்மானித்தது சங்கானை கிங்ஸ் அயன் டெஸ்மன் யோடி. நல்ல தொடக்கம் கொடுத்தது. அணி 40 ஓட்டம் எடுத்த போது அதிரடி காட்டிய அயன் 4 ஆறு ஓட்டம் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார். அத்தோடு ஓட்ட வேகம் குறைய ஆரம்பித்தது. மற்றைய ஆரம்ப வீரர் டெஸ்மனும் 23 ஓட்டங்களோடு ஆட்டமிழந்தார். ரகிம் 13 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் அதிரடியாக ஆட முற்பட மோகனதீபன் ஒரே ஓவரில் மூன்று விக்கெட்டை வீழ்த்தி ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்தினார். இறுதியில் அணித் தலைவர் ஓர் ஆறு ஓட்டம் பெற 16 பந்துப் பரிமாற்ற முடிவில் 103 ஓட்டங்களைப் பெற்றது சங்கானை கிங்ஸ். அயன் 29, டெஸ்மன் 23, ரகிம் 13 ஓட்டங்கள் பெற்றனர்.

பந்து வீச்சில் மோகனதீபன் 4 விதுசன் 2 விக்கெட்டை வீழ்த்தினர். 104 ஓட்டம் பெற்றால் வெற்றி என களமிறங்கிய காமாட்சி ஆரம்ப வீரர் விதுசன் களத்தில் பொறுப்புணர்ந்து ஆட விரைவில் இரு விக்கெட்டை இழந்தது. 11 பந்துப் பரிமாற்ற முடிவில் இரண்டு விக்கெட்டை இழந்து 44 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

30 பந்துகளில் 60 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் மைதானத்தில் ஆரம்ப ஆட்டக்காரர் விதுசனோடு அணித் தலைவர் சிந்து அதிரடி ஆட்டம் ஆடினார். வதுசன் ஆறு ஓட்டங்கள் 6 அடங்கலாக 51 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த வீரரும் ஆட்டம் இழக்க மீண்டும் பரபரப்பு மைதானத்துள் அணித் தலைவர் சிந்து இருப்பது காமாட்சியினருக்கு நம்பிக்கை. இறுதி பந்து பரிமாற்றத்தில் இமாலய சிக்சர் அடித்து 15.3 பந்துபரிமாற்றங்களில் வெற்றியோடு முடிவுறுத்தினார் சிந்து. சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் ஆட்ட நாயகன் விதுசன். காமாட்சி சிறந்த பந்து வீச்சாளர் மோகனதீபன். காமாட்சி சிறந்த சகலதுறை வீரர் அயன் கிங்ஸ் தெரிவு செய்யப்பட்டனர். வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். காமாட்சி 5 விக்கெட்டால் வெற்றி பெற்று சம்பியனாகியது. (க)

# பொலிகண்டி பாரதி உதைபந்தாட்ட தொடர்

## ஹென்றிஸ் வெற்றி



பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந் தாட்ட சுப்பர் 8 போட்டியில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து ஆடிய ஹென்றிஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அவ் அணி சார்பாக மதுசன் 2 கோலினையும் சுமன் 01 கோலினையும் போட் டனர். போட்டியின் ஆட்ட நாயகனாக யூட் சுமன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# வல்வை விளையாட்டுக்கழகத்தின் நட்பு ரீதியிலான கிரிக்கெட் போட்டி



வல்வை விளையாட்டுக்கழகத்தின் துடுப்பாட்ட அணியினை பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையில் தொழில் புரிவோருக்கும் (Valvai Domestic Players) வெளிநாட்டில் தொழில் புரிவோருக்குமிடையில் (Valvai Abroad Players) அண்மையில் நடைபெற்ற நட்பு ரீதியிலான எட்டு வீரர்கள், 10 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட மென்பந்தாட்டப் போட்டியில் வல்வை வெளிநாட்டில் தொழில்புரிவோர் அணியினர் 3 இலக்குகளால் வெற்றி பெற்றனர்.

வல்வை றெயின்போ மைதானத்தில் ஸ்ரீ கரனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற போட்டியில் இலங்கையில் தொழில் புரிவோருக்கான அணிக்கு பிரணவனும் வெளிநாட்டில் தொழில் புரிவோர் அணிக்கு ருதேஷாவும் தலைமை தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# ஊரெழு றோயல் அரையிறுதிக்கு தகுதி



குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் நேற்று முன்தினம் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணி 4:2 என்ற டைனால்டி மூலம் சென் நீக்கிலஸ் அணிக்கெதிராக வெற்றி பெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர். (க)

கியூட் சிறப்பாட்டம்

# பாரதி உதைபந்தாட்ட தொடர்

## இளவாலை சென்லூட்ஸ் வெற்றி



பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் (19.09.2016) நடைபெற்ற மின்னொளியிலான சுப்பர்-8 போட்டியின் முதலாவது ஆட்டத்தில் இளவாலை சென்லூட்ஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் மோதியது.

ஆட்டத்தின் முதலாவது பாதியின் 8 வது நிமிடத்தில் ஞான முருகன் சுமன் கோல் போட முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டம் அதிரடியாக விளையாடிய சென் லூட்ஸ் கோல் 32 வது நிமிடத்தில் கோல் போட அடுத்த 38 ஆவது நிமிடத்தில் கியூட் கோல் போட்டு அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். ஆட்ட நேர முடிவில் சென் லூட்ஸ் ஞானமுருகனை 2:1 என்ற ரீதியில் வெற்றியீட்டியது.

போட்டியின் ஆட்ட நாயகன் சென் லூட்ஸ் அணி வீரர் கியூட் தெரிவு செய்யப்பட்டார். (க)

## "எழுக தமிழ்" பேரணி...

இது தொடர்பில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில்,

அரசியல் யாப்பொன்றை எமக்குச் சாதகமாகத் தரப்போவதாக அறிவித்திருக்கும் அரசாங்கம் அதே நேரத்தில் எமது வடக்கு, கிழக்கு இருப்பையும் தனித்துவத்தையும் பாதிக்கும் வண்ணம் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை அரசாங்கத்தின் உள்நோக்கம் பற்றி சந்தேகங்களை எழுப்புகின்றன.

நாட்டில் எங்கும் புத்தர் சிலை எழுப்ப முடியும், அது எமது சுதந்திரம் என்று சில புத்த பிக்குமார் கூறித்திரிகின்றார்கள். நடைமுறையிலும் சிலைகளையும் விகாரைகளையும் எழுப்பி வருகின்றார்கள்.

நாடு பூராகவும் பரந்து வாழ்ந்த தமிழ் பேசும் மக்களைத் தமது வாழ்விடங்களில் இருந்து 1958, 1961, 1974, 1977, 1983 போன்ற வருடங்களில் ஏற்பட்ட கலவரங்களின் ஊடாகவும் வேறு விதங்களிலும் இடம்பெயர வைத்து அவர்களின் வசிப்பிடங்களையும் வணக்கஸ்தலங்களையும் கைவிட்டுச் செல்ல நடவடிக்கைகள் எடுத்து, முக்கிய நகரங்களை விட மற்ற இடங்களில் தமிழ் பேசும் மக்களின் பரம்பலை ஏறத்தாழ இல்லாமல் ஆக்கி, பலரை வெளிநாடுகள் நோக்கிச் செல்ல தூண்டும் வகையில் வன்முறைகளில் ஈடுபட்டனர். பின் போர்க்காலத்தில் பலவிதமான கொடூரங்களில் ஈடுபட்டு போர்க் குற்றங்களில் ஈடுபட்டு எமது மக்களுள் பலரை நிர்மூலமாக்கி பலரை நாட்டைவிட்டு ஓடிப்போகச் செய்து, எமது ஆதனங்களைச் சிதைத்து சின்னா பின்னமாக்கி, வணக்கஸ்தலங்கள் பலவற்றை அழித்தொழித்தனர். வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரை யுத்தம் முடிந்து ஏழு வருடங்கள் ஆன பின்னரும் தொடர்ந்திருந்து எமது வாழ்விடங்களை விட்டகலாது வாழ்வாதாரங்களைச் சுரண்டுவதும், வடக்கு கிழக்கு மாகாண மண்ணை விட்டு, மேலும் மாகாணங்களின் கரையோர இடங்களை விட்டு நீங்காதுள்ளனர்.

நாட்டில் எங்கும் புத்தர் சிலை எடுப்பதற்கு சுதந்திரம் இருப்பதாகக் கூறுவது பக்கத்து வீட்டுக்காரன் எமது காணிக்குள் அத்து மீறி வந்து, இது எமது நாடு நான் எங்கும் இருக்கலாம், எதனையும் கட்டலாம், எவ்வாறாகவும் நடந்து கொள்ளலாம் என்று கூறுவது போல் இருக்கின்றது!

பெரும்பான்மையின் ஊடுருவல் பல விதங்களில் எமது பாரம்பரிய தமிழ் பேசும் இடங்களில் பரவி வருவது கண்டிக்கப்பட வேண்டியதொன்று. தமிழ் பேசும் மக்களின் அடையாளங்களையும் அவர்களின் தனித்துவத்தையும் பேணுவோம், அதற்கான அரசியல் யாப்பினைத் தவறாது தருவோம் என்று உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் கூறி வந்தவர்கள் பெரும்பான்மையின மக்களின் இராணுவத்தினரை வடக்குக் கிழக்கில் தொடர்ந்தும் பரந்து வாழ இடமளிப்பதும் புத்த விகாரைகளை அவர்கள் துணை கொண்டு எழுப்புவதும், நடந்து போன யுத்தக் குற்றங்களை முறையாக ஆராயாது அவற்றில் இருந்து விடுபட எத்தனிப்பதும், எல்லா வகையான ஏமாற்று வேலைகளைச் செய்யலாம் எனத் திட்டமிட்டு எமது வாழ்விடங்களை ஆக்கிரமித்து எமது இனத்தின், மொழியின், மதங்களின் அடையாளங்களைப் படிப்படியாக அழிக்கும் ஒரு அந்தரங்க செயற்பாட்டின் அங்கமே என்பது கண்கூடு.

உரிமைகளைக் கொடுப்போம் என்று சர்வதேசத்திற்கு ஒரு புறம் கூறிவிட்டு மறுபுறத்தில் எமது உரிமைகளைப் பறித்தெடுப்பதைத்தான் 13ஆவது திருத்தச்சட்டம் வந்த போது அரசாங்கம் செய்தது. இந்திய அரசாங்கத்திடம் இணக்கம் தெரிவித்தவாறு இலங்கை அரசாங்கம் 13ஆவது திருத்தச் சட்டத்தை எமக்கு இயைபாக்க முன்வரவில்லை. ஒரு கையால் கொடுப்பது போல் கொடுத்து மாகாண சபைகள் சட்டத்தால் மறுகையால் அதிகாரங்களைத் திருப்பி எடுக்கும் காரியத்தில் இறங்கியது.

அதனையே இப்பொழுதும் காண்கின்றோம். தருவது போல் தரணிக்குக் கூறிவிட்டு எமது தனித்துவத்தைத் தவிடுபொடியாக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. உடனேயே சட்டபூர்வமற்ற சகல பௌத்த விகாரைகளும் புத்த சிலைகளும் பௌத்த கோயில்களும் எமது மண்ணில் இருந்து அகற்றப்பட வேண்டும். சட்டப்படி உரியவாறு அனுமதி கேட்டு எமது மண்ணில் எந்த மதத் தலத்தைக் கட்டுவதை நாம் எதிர்க்கவில்லை. பலாத்காரமாக இவற்றைச் செய்வதையே நாம் கண்டிக்கின்றோம். இவ்வாறான பௌத்த மயமாக்கல் திட்டமிட்ட இன, மொழி, மதப் பரம்பலைப் பாதிக்கும் செயல்களே என்பது எமது ஏகோபித்த முடிவு.

அரசியல் யாப்பை அரசாங்கம் கொண்டு வர இருக்கின்றதே என்பதற்காக நாம் மௌனம் காத்தோமானால் யாப்பிலும் நாம் ஏமாற்றப்படுவோம். நாம் வாழும் வாழ்விடங்களிலும் ஏமாற்றப்படுவோம். எனவேதான் இந்த "எழுக தமிழ்" பேரணி ஏற்றதொரு உபாயமாக எமக்குப்பட்டுள்ளது! வன்முறை நாடாமல், வசை பாடாமல், வஞ்சிக்கப்பட்டு வரும் எமது அண்மைய வரலாற்றை உலகறியச்செய்வதற்கே இந்தப் பேரணி!

என் இனிய தமிழ் பேசும் சகோதர சகோதரிகளே! கட்சி பேதமின்றி, ஆண் பெண் வித்தியாசமின்றி, வயது பேதமின்றி, பிரதேச பேதங்கள் இன்றி, வர்க்க பேதம் இன்றி, சாதி பேதமின்றி யாவரும் சேர்ந்து பெரும்பான்மையினரால் நடத்துவிக்கப்பட்டு வரும் தவறான நடவடிக்கைகளைக் கண்டிப்போமாக! தமிழ் மக்களுக்கு உரித்தான சமஷ்டி அரசியல் அமைப்பின் தேவையை இத்தால் வலியுறுத்துவோமாக! எமது ஒற்றுமையை உலகறியச் செய்வோமாக! வாழ்க தமிழ்! எழுக தமிழ் என முதலமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (12)

## இன இணைப்பில்...

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் ஆரம்பமாகியுள்ளது. இதன் முதல் அமர்வில் ஆற்றிய தொடக்க உரையில் உலகின் பல்வேறு நாடுகளிலும் இடம்பெற்று வரும் போர், அவற்றை முடிவுக்கு கொண்டு வர எடுக்கப்படும் முயற்சிகள் மற்றும் மனித வுரிமைகள் தொடர்பில் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது மியான்மாரையும், இலங்கையையும் ஒப்பிட்டு ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் கூறுகையில், "மியான்மாரில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நம்பிக்கைக்குரிய வகையில் அமைந்துள்ளன. இலங்கையில் போருக்குப் பிந்திய காயங்களைக் குணப்படுத்தும் முயற்சிகள் தீவிரம் பெற்றுள்ளன.

இந்த இரண்டு நாடுகளிலும் இனங்களுக்கு இடையில் புதிய இணைப்பு ஒன்றைக் கட்டியெழுப்புவதிலேயே உண்மையான நல்லிணக்கம் தங்கியுள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

ஐ.நா செயலாளர் நாயகம் பதவியில் இருந்து எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் விலகவுள்ள பான் கீ மூன், இந்தக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து தனது இறுதி உரையை நிகழ்த்தியுள்ளார்.

ஐ.நா பொதுச்சபையின் இந்த கூட்டத் தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 193 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அமைச்சர்களான மங்கள சமரவீர, கயந்த கருணாதிலக, அர்ஜுன ரணதுங்க மற்றும் அஜித் பெரேரா உள்ளிட்டவர்களும் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

# 2018இலிருந்து (உ/த) கல்வி பயில (சா/த) சித்தி கட்டாயமில்லை

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

எதிர்வரும் 2018ஆம் ஆண்டு முதல் கல்விப்பொதுத்தராதர உயர் தரக்கல்வியை தொடர்வதற்கு கல்விப்பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் கருத்திற் கொள்ளப்படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இதனை நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் சாதாரண தரத்தில் தோல்வி கண்டவர்களும் தமக்கு விருப்பமான பாடத்திட்டம் ஒன்றை உயர்தரத்தில் பயிலமுடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை காரணமாக, சாதாரண தரத்தில் தோல்வி கண்டவர்களின் திறமைகளுக்கு இடம்தரமுடியும் என்றும் கல்வி அமைச்சர அகிலவிராஜ் காரியவசம் கூறியுள்ளார். (செ)

# சுவிஸ் காரை அபிவிருத்தி சபை நடத்தும் மாணவர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சுவிஸ் காரை (காரைநகர்) அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் காரைநகரைப் பூர்வீகமாக கொண்ட மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, இசைப்போட்டி, பொது அறிவு-வினாவிடைப்போட்டி, திருக்குறள்மனனப்போட்டி என்பன மூன்று பிரிவுகளாக வயது அடிப்படையில் நடத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 0770452475 என்னும் தொலைபேசி இலக்கத்துடனே அல்லது eeveraa2000@gmail.com என்னும் மின்னஞ்சலுடன் தொடர்பினை ஏற்படுத்த முடியும். (11)

# விபத்துக்களால் உயிரிழந்தோர் நினைவாக ஒக்டோபர் 10 ஒரு மணி நேர கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்துக்களால் உயிரிழந்தவர்களின் நினைவாக 4 அம்ச கோரிக்கைகளை முன் வைத்து "எழுந்து நிற்போம்" எனும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ள ஒரு மணி நேர கவனயீர்ப்பு நிகழ்வுக்கு அனைத்து பொதுமக்களையும் ஒன்றிணையுமாறு யாழ் போதனா வைத்தியசாலை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடாடபாக யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறித்த கோரிக்கையை விடுத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியில் யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் வீதி விபத்துக்களால் இறப்பவர்கள், காயமடைபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து செல்கிறது.

வடக்கில் வாகன அனுமதிப்பத்திரத்தை சோதனையிடுவதை தவிரவேறு எந்த விதி முறைகளும் சரிவர அமுல்படுத்தப்படுவதில்லை. அதிகரித்து செல்லும் வாகனப் பாவனை, கட்டுமீறி போகும் மதுபான, போதைப்பொருள் பாவனை, வீதி ஒழுங்கு முறைகள் சரியாக அமுல்படுத்தப்படாமை போன்றவை காரணமாக உயிரிழப்புக்கள் ஏற் படுகின்றன.

இந்த உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்கு 4 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து அரசிடம் அதை அமுல்படுத்த வலியுறுத்தி ஒரு மணிநேர கவனயீர்ப்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதாவது குறுகிய கால அறிவித்தலுடன் வீதி ஒழுங்குமுறைகளை சட்ட நடைமுறைகளுக்கு அமைய வடபகுதியில் முழுமையாக அமுல்படுத்தல், பொதுமக்களின் சேவையில் ஈடுபடும் எந்தவொரு வாகனமும் வீதி ஒழுங்கினை கடைப்பிடிக்காது விபத்துக்கு காரணமாக அமையுமாயின் அந்த வாகனத்தினையும் சாரதியினையும் முற்றாக பொதுமக்களின் சேவையில் இருந்து நீக்கி விடுதல், வீதி ஒழுங்கினை கடைப்பிடிக்காது பயணிக்கும் பொது மக்களின் சேவையில் ஈடுபடும் வாகனங்களை பற்றி பொதுமக்கள் உடனுக்குடன் போக்குவரத்து பொலிஸாரிடம் முறையிட வசதியாக அவசர தொலைத்தொடர்பு இலக்கங்களை மாவட்டம் தோறும் வெளியிடுதல், மதுபான விற்பனையும் மதுபான பாவனையும் கட்டுப்படுத்துவதுடன் போதைப்பொருட்களின் பயன்பாட்டை வடபகுதியில் முற்றாக ஒழித்தல் போன்ற 4 அம்ச கோரிக்கைகளை முன் வைத்து விபத்துக்களினால் உயிரிழந்தவர்களை நினைவுபடுத்தி இந்த "எழுந்து நிற்போம்" எனும் கவனயீப்பு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி 10 மணி தொடக்கம் 11 மணி வரையான காலப்பகுதியல் அத்தியாவசிய சேவைகள் பாதிக்காதபடி தத்தமது வேலைகளை நிறுத்தி அலுவலகங்கள் வேலைத்தள வாசல்களில் முன் ஒன்று கூடி நின்று உயிரிழந்தவர்களை நினைவு கூருமாறு அனைத்து தரப்பினரிடமும் கேட்டுக் கொள்கிறோம்.

இதற்கு பல தொழிற்சங்கங்கள் தமது ஆதரவினை வழங்கியுள்ளதுடன் மேலும் பலரது ஆதரவினையும் எதிர்பார்த்து நிற்கிறோம். இந்த நிகழ்வில பங்குபற்றிய வடபகுதி தொழில் சங்கங்களின் பிரதிநிதிகளினால் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கையொப்பமிட்ட மனு ஒன்று யாழ்.மாவட்ட அரச அதிபரின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதுடன் அதன் பிரதிகள் பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர், நீதித்துறை அமைச்சர், வடமாகாண ஆளுநர், வடமாகாண முதலமைச்சர், சட்ட ஒழுங்கு அமைச்சர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என மேலும் தெரிவித்துள்ளனர். (9)

# மட்டு.புதுக்குடியிருப்பு படுகொலை; 26ஆவது ஆண்டு நினைவு நேற்று



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்திலுள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்தின் 26ஆம் ஆண்டு நினைவு நேற்று புதன்கிழமை அப்பகுதி மக்களால் நினைவு கூரப்பட்டது.

பெண்கள், குழந்தைகள் உட்பட 17 தமிழர்கள் 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டனர். சம்பவத்தில் 28 பேர் காயமடைந்தனர்.

மேற்படி படுகொலை சம்பவத்தில் இறந்தவர்களை நினைவு கூரும் வகையில் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபிக்கு முன்பாக நினைவு சுடரேற்றல் உட்பட பிரதான வைபவம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சபை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (செ)

# சந்தேக நபர் உயிரிழந்த...

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த ஶ்ரீஸ்கந்த ராசா சுமன் என்ற நபர் 2011 ஆம் ஆண்டு உயிரிழந்திருந்தார்.

களவு தொடர்பான வழக்கொன்றில் கைதுசெய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதே இவர் உயிரிழந்தார்.

இந்த நிலையில் சுமன் எனப்படும் சந்தேகநபர் பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற நிலையில் கிளிநொச்சி - இரணைமடுக் குளத்தில் வீழ்ந்து உயிரிழந்ததாக அப்போது பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. எனினும் பொலிஸ் நிலையத் தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த போது குறித்த நபர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதுடன் சித்திர வதைகளுக்கும் உட்படுத்தப்பட்டார் என்று அவருடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய சந்தேக நபர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், குளத்திலிருந்து கைப்பற்றப்பட்ட சடலத்தில் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான அடையாளங்கள் காணப்பட்டமை பிரேத பரிசோதனைகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் உறவினர்களின் கோரிக்கைக்கு அமைய நீதிமன்றத்தால் இரகசிய பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இதன்படி இரகசிய பொலிஸாரினால் நடத்தப்பட்ட விசாரணைகளின் ஊடாக இதுவொரு கொலை என நம்பக் கூடியவாறான சாட்சியங்கள் உள்ளதென இரகசிய பொலிஸார், சட்டமா அதிபர் திணைக்கத்திற்கு அறிவித்திருந்தனர்.

இதன்படி சாட்சியங்களை ஆராய்ந்த சட்டமா அதிபர் குறித்த சந்தேக நபர்களான சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக அப்போது கடமையாற்றிய பிரியந்த பண்டார மற்றும் அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஏனைய 3 பொலிஸ் அதிகாரிகளையும் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கடந்த வாரம் இரகசிய பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்கள பொறுப்பதிகாரி கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசாவும் சந்தேக நபர்களான பொலிஸாரைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

நீங்கள் தொழில் தேடுபவரா?
முன்னணி நட்சத்திர ஹோட்டேல்களில்
Front Office, Restaurant, Room Service,
Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்
O/L உடன் Diploma in Hotel Management
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE English Course
Up to 30% Discount
பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு 077 3616 798
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
SIKARAM ACADEMY
SCHOOL of HOSPITALITY
இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம். (C-5869)

DEUTSCH and ITALIAN
வகுப்புக்கள்.
யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, கிளிநொச்சி.
T. நந்தன் 077 078 2022 077 670 7327

V2 TRAVELS
குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
• வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
• வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம் (Online form) நிரப்புதல்.
• இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.
தொடர்புகளுக்கு: 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-5799)

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத கடவை முன்பாக)
பொருளியல் R. தர்ஷன்
கணக்கீடு AP. பகீரதன்
வணிகக்கல்வி S.யசோதரன்
A/L 2017, 2018 நடைபெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்
24.09.2016 சனி காலை 8 மணி
அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு :-
077 4598 499

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# யாழில் வீதி விபத்துக்களால்...

வண்ணமே உள்ளன. அதனால் நாளுக்கு நாள் பல உயிர்களை இழந்து கொண்டிருக்கிறோம். பலர் அங்கவீனமடைந்து போகிறார்கள். விபத்துக்களால் அதிகம் பாதிக்கப்படுவது இளம் வயதினர் என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாக காணப்படுகிறது.

குறிப்பாக கடந்த வருடம் வீதி விபத்தினால் படுகாயமடைந்து 3 ஆயிரத்து 424 பேர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதில் 64 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இந்தவருடத்தின் முதல் காலாண்டில் 509 பேர் வீதி விபத்தினால் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதில் 8 உயிரிழந்துள்ளதுடன், 2 ஆம் காலாண்டில் 387 பேர் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது யாழ் போதனா வைத்திய சாலையின் தரவு மாத்திரமே ஆகும். இதைவிட யாழ் மாவட்டம் முழுவதிலும் இடம்பெற்ற விபத்துக்களின் அடிப்படையில் காயமடைந்தவர்களினதும் உயிரிழந்தவர்களினதும் எண்ணிக்கை மிக கூடுதலாகவே இருக்கிறது.

இத்தரவின் அடிப்படையில் பார்க்கும்போது கடந்த வருடத்தை விட ,ந்தவருடம் வீதிவிபத்தினால் உயிரிழப்பவர்கள் அதிகரித்த வண்ணமே உள்ளனர். இது மிகவும் வருந்தத்தக்க விடயம் ஆகும். இதை நிறுத்த வேண்டிய கடமை நம் ஒவ்வொருவரிடமும் உண்டு.

விபத்தில் உயிரிழந்தவர்களில் அதிகமானவர்கள் 30 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களாகவே உள்ளனர். அதிக வேகத்தினால் ஏற்பட்ட விபத்துக்களே அதிகரித்துக்கொண்டு செல்கின்றன.

எனவே இதை தடுப்பதற்கு பொலிஸார் கடுமையான சட்ட நடவடிக்கைகளை தொடர்சியாக அமுல்படுத்த வேண்டும், பொதுமக்கள் சட்டங்களை ஒழுங்காக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (9)

# ஈழத்தமிழருக்கு ஆதரவு....

சந்தனகீர்த்தி பண்டார (57) என்பவர் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த 2013ஆம ஆண்டு யூலை 22-ம் திகதி இளவரசர் வில்லியம் மற்றும் இளவரசி கேட் மிடில்டன் தம்பதிக்கு குட்டி இளவரசர் ஜோர்ஜ் பிறந்துள்ளார்.

இந்த செய்தியை மறுநாளான 23-ம் திகதி சிறப்பு செய்தியாக வெளியிட பி.பி.சி தீர்மானித்துள்ளது.

அப்போது, செய்தியை வெளியிடும் பொறுப்பை சந்தனகீர்த்தி பண்டார பார்த்து வந்துள்ளார். இளவரசர் ஜோர்ஜ் பிறந்த செய்திக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என சந்தனகீர்த்திக்கு தகவல் அளிக்கப்பட்டது.

ஆனால், செய்தி வெளியிட வேண்டிய அதே யூலை 23-ம் திகதி இலங்கையில் 'கறுப்பு யூலை' அனுசரிக்கப்பட்டது. அதாவது, கடந்த 1983ஆம் ஆண்டு யூலை 23ஆம் திகதி தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தியதில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

எனவே, இலங்கை தமிழர்களின் செய்திக்கு தான் முன்னுரிமை கொடுப்பேன் என்றும், அதே நாளில் குட்டி இளவரசர் ஜோர்ஜ் பிறந்த செய்தி 'சிறப்பு செய்தியில்' வராது எனவும் சந்தனகீர்த்தி திட்டவட்டமாக கூறியுள்ளார்.

செய்தியாளர் கூறியது போலவே மறுநாள் இலங்கை தமிழர்களின் செய்தியை அவர் வெளியிட்டுள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த பி.பி.சி நிறுவனம் சந்தனகீர்த்தி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. மேலும், இதுபோன்ற தவறு மீண்டும் நிகழாமல் இருக்க அவரிடம் உறுதி பத்திரமும் எழுதி வாங்கப்பட்டது.

ஆனால், இச்சம்பவம் நிகழ்ந்து ஒரு வருடத்திற்கு பின்னர், அதாவது, கடந்த 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி சந்தனகீர்த்தியை பி.பி.சி நிறுவனம் பணியில் இருந்து நீக்கியது.

பி.பி.சி நிறுவனத்தின் இந்த நடவடிக்கை தனி மனித உரிமையை பறிப்பதாக இருப்பதாக கூறி சந்தனகீர்த்தி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பான இறுதி விசாரணை நேற்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளது.

அப்போது, 18 ஆண்டுகளாக பி.பி.சி நிறுவனத்தில் பணியாற்றிய செய்தியாளர் மீது தனிப்பட்ட விரோதம் காரணமாக பி.பி.சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது கண்டிக்கத்தக்கது.

எனவே, செய்தியாளரின் உரிமையை பறிக்கும் விதத்தில் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது தவறு எனக் கூறிய நீதிபதிகள், சந்தனகீர்த்திக்கு 51,428 பவுண்ட் (97,63,855 இலங்கை ரூபாய்) இழப்பீடு வழங்க வேண்டும் என பி.பி.சி நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளனர். (11)

# எழுக தமிழ்...

களை கடந்து ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற அடிப்படையில் எமது உரிமைக் குரல் ஓங்கி ஒலித்திட வேண்டும் என் பதில் எம்மத்தியில் வேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

இந்த யதார்த்தத்தின் அடிப்படையில், அரசியல் நீதி கோரி நிற்கும் எமது மக்களின் உணர்வுபூர்வமான ஆதரவு "எழுக தமிழ்" பேரணிக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே மக்கள் அணிதிரண்டு கலந்துகொண்டு தமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுமாறு கட்சியின் செயலாளர் நாயகம் ந.ஶ்ரீகாந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

# தமிழ் அரசியல் கைதிகள்...

பித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு கடந்த மாதம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் தமது விடுதலை குறித்து வலியுறுத்தியிருந்த தமிழ் அரசியல் கைதிகள், இம்மாதம் தாங்கள் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தங்கள் மீதான வழக்குகளை தமிழ் பிரதேசங்களுக்கு மாற்றி, விசாரணையை துரிதப் படுத்தி, தம்மை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி இவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச சமூகத்தையும், மக்களையும் ஏமாற்றும் வகையிலேயே தம்மை விடுதலை செய்வதற்காக விசேட நீதிமன்றங்களை அமைப்பதாக அரசாங்கம் கூறுவது காலத்தை கடத்தும் செயற்பாடு என அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்திருந்தனர்.

பொது மன்னிப்பின் அடிப்படையில் தம்மை விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி இதற்கு முன்னரும் பல தடவைகள் தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருந்த நிலையில், ஒரு சிலரே விடுவிக்கப்பட்டிருந்தனர். (12)

# அரசியல்...

சட்டத்தின் கீழ் நிலுவையாக உள்ள வழக்குகளை தளர்த்துவது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது.

புனர்வாழ்வு ஆணையாள்ர் நாயகத்தின் கீழுள்ள பிரிவினால் முன்னெடுக்கப்படும் ஆறு மாத கால புனர்வாழ்விற்கு சந்தேகநபர்கள் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிரான வழக்குகள் இலகுபடுத்தப்படும் என புனர்வாழ்வு அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார்.

சிறிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 23 பேரை புனர்வாழ்விற்கு உட்படுத்தப்படவுள்ளதாக மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (12)

அன்னை முத்துமாரி பஸ்சேவை
Annai Muthumari
கொழும்பு - யாழ்ப்பாணம் - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை
புதிய நான்கு A/C பஸ்களுடன் இருவழிச் சேவையை இரவு, பகல் என விஸ்தரித்துள்ளது.
காலை (புறப்படும் நேரம்) / மாலை (புறப்படும் நேரம்)
பருத்தித்துறை 7.00 am | பருத்தித்துறை 7.00 pm
யாழ்ப்பாணம் 8.00 am | யாழ்ப்பாணம் 8.00 pm
வெள்ளவத்தை 7.30 am | வெள்ளவத்தை 7.30 pm
கொட்டாஞ்சேனை 8.30 am | கொட்டாஞ்சேனை 8.30 pm
வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம்
யாழ்ப்பாணம் 077 544 8503
கொழும்பு 077 544 9251
வல்வெட்டித்துறை 077 544 7359
நெல்லியடி 077 285 0285
இலங்கையின் முதல்தர கம்பனியின் கிளை நிறுவனமான JETEX கூரியர் நிறுவனத்தின் யாழ் மாவட்ட உத்தியோகபூர்வ முகவர்
JETEX
SRILANKA'S FASTEST SERVICE MALL
உள்நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள், பொதிகள் துரித கதியில் அனுப்பிட இன்றே நாடுங்கள்.
133, (A9) கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். தொ.பே.இல:- 021 221 6773 | 077 544 8503
நெடியகாடு பிள்ளையார் கோவிலடி, வல்வெட்டித்துறை. தொ.பே.இல:- 021 221 6773 | 077 544 7359
208A, காலி வீதி (றோயல் பேக்கரி அருகாமை), வெள்ளவத்தை. தொ.பே. இல:- 011 236 1766 | 077 544 9251

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.